வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959
Reg. No. : P. 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu


Email : eelanaduweekly@gmail.com   மலர் : 05   13.04.2024 சனிக்கிழமை   இதழ் : 104   பக்கங்கள் : 12




கச்சதீவு விவகாரம்:

# இலங்கையுடனான உறவை பாதிக்கும்!

## யஷ்வந்த் சின்ஹா எச்சரிக்கை



புதுடில்லி, ஏப்ரல் 13

கச்சதீவு விவகாரத்தை மீண்டும் பிரச்னையாக எழுப்புவதால் இலங்கையுடனான உறவு பாதிக்கப்படும். கச்சதீவை திரும்பப் பெறுவதற்கு என்ன செய்யப் போகிறீர்கள்? இலங்கை மீது படை எடுக்கப் போகிறீர்களா?

- இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார் இந்தியாவின் முன்னாள் வெளிவிவகார அமைச்சரான யஷ்வந்த் சின்ஹா.

கச்சதீவு விவகாரம் இந்திய பாராளுமன்றத் தேர்தலில் முக்கியத்துவம் பெற்றுள்ளது. இந்த நிலையிலேயே யஷ்வந்த் சின்ஹா மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

மேலும், பாராளுமன்றத் தேர்தல் நெருங்குவதால் இதை தேர்தல் பிரச்னையாக

11

# இன்று பிறக்கிறது 'குரோதி' ஆண்டு

**வாக்கிய பஞ்சாங்கத்தின்படி:**

சித்திரை புத்தாண்டு "குரோதி" வருடமானது இன்று சனிக்கிழமை பூர்வபக்ஷ ஷஷ்டி திதி, மிருகசீரிடம் நட்சத்திரம், சோபனம் நாமயோகம், கவுலவக்கரணம், துலாம் லக்னம், மிதுன நவாம்சம், சனி காலவோரை, தாமத குண வேளை சேர்ந்த முன்னிரவு 8 மணி 15 நிமிட நேரமளவில் பிறக்கிறது.

**விஷு புண்ணியகாலம்**

இன்று சனிக்கிழமை - பிற்பகல் 04.15 மணி முதல் நள்ளிரவு 12.15 மணி வரை.

**திருக்கணித பஞ்சாங்கத்தின்படி:**

பங்குனி 31ஆம் நாள் இன்று சனிக்கிழமை

11




## 200 கிலோ போதைப்பொருடன் 10 பேர் கடற்படையால் கைது!

கொழும்பு, ஏப். 13

இரண்டு மீன்பிடி படகுகளில் கடத்தப்பட்ட சுமார் 200 கிலோ போதைப்பொருளுடன் 10 பேரை கடற்படையினர் கைது செய்துள்ளனர்.

கைப்பற்றப்பட்ட படகுகளில் ஹெரோயின் அல்லது ஐஸ் போதைப்பொருள் இருப்பதாக சந்தேகிக்கப்படுவதாக கடற்படை பேச்சாளர் கயான் விக்கிரமசூரிய தெரிவித்தார்.

கைதானவர்கள் காலி துறைமுகத்துக்கு கொண்டு வரப்பட்ட பின்னர் படகுகளை முழுமையாக சோதனையிட நடவடிக்கை எடுக்கப்படும் என்று கடற்படை பேச்சாளர் நேற்று தெரிவித்தார். (ஐ -எ)

## பொது வேட்பாளரை நிறுத்த கொள்கையளவில் இணக்கம்

### சிறீதரன் எம்.பி. தெரிவிப்பு

கிளிநொச்சி, ஏப். 13

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொதுவேட்பாளர் நிறுத்தப்படுவதற்கு கொள்கையளவில் இணக்கம் தெரிவிக்கும் அதேநேரம், கட்சியின் தீர்மானமும் முக்கியமானது என்று இலங்கைத் தமழரசுக்கட்சியின் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்தார்.

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் தமிழ்க் கட்சிக ளின் சார்பில் பொதுவேட்பாளர்

11

## இரு சர்வதேச மைதானங்களை யாழில் அமைப்பதற்கு திட்டம்!

யாழ்ப்பாணம், ஏப்.13

யாழ்ப்பாணத்தில் சர்வதேச தரத்தில் கிரிக்கெட், உதைபந்தாட்ட மைதானங்களை அமைப்பது குறித்து ஆராயப்பட்டுள்ளது.

செம்மணியில் - யாழ்ப்பாணம் வரவேற்பு வளைவுக்கு அண்மையாக இந்த மைதானங்களை அமைப்பதற்கான திட்ட முன்மொழிவை நகர அபிவிருத்தி அதிகார சபை யாழ். மாவட்ட அபிவிருத்தி குழுவிடம் சமர்ப்பித்துள்ளது.

11

## விவாதங்களை தவிர்த்து தப்பியோட வேண்டாம்

### அநுரவை சாடிய சஜித்

கொழும்பு, ஏப்.13

கோழைகள் போன்று விவாதங்களிலிருந்து தப்பியோட வேண்டாம் என புரட்சித் தலைவர்களிடம் கோரிக்கை விடுப்பதாக அநுரகுமார திஸநாயக்கவை மறைமுகமாக சாடியுள்ளார் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ.

அத்துடன், நாடு வங்குரோத்தடைந்துள்ள நிலையில் நாட்டைக் கட்டியெழுப்பும் சவாலை மக்கள் ஆணையுடன் ஏற்றுக்கொள்ள வேண்டும். அதிலிருந்து எவராலும் தப்ப முடியாது. உலகிலுள்ள

11

## தமிழரின் இருப்பை நிலைநிறுத்த தமிழ் பொது வேட்பாளர் அவசியம்!

### சட்டத்தரணி தவராசா

கொழும்பு, ஏப். 13

இன்றைய அரசியல், பொருளாதார சூழமைகளில் தமிழ் மக்கள் தங்கள் இருப்பை நிலை நிறுத்தவும் உரிமைக் கோரிக்கைக்கான ஒரு குரலாகவும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொதுவேட்பாளர் என்ற விடயத்தை முன்வைப்பது பொருத்தமாக இருக்கும்- என்று தமிழ் அரசுக் கட்சியின் கொழும்பு கிளைத் தலைவரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான கே. வி. தவராசா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் அனுப்பிவைத்துள்ள

11

## யாழ். இளைஞர்கள் இருவருக்கு இந்தியாவில் சிறைத் தண்டனை

சென்னை, ஏப். 13

யாழ்ப்பாணத்திலிருந்து இழுவைமடி படகில் சென்று இந்தியாவின் தொண்டிப் பகுதியில் இறங்கிய இருவருக்கு 7 மாதங்கள் சிறைத் தண்டனை விதித்துள்ளது நீதிமன்றம்.

கடந்த 2022 ஏப்ரல் 28 ஆம் திகதியன்று யாழ்ப்பாணம் - குருநகரிலிருந்து சென்று தமிழகம் தொண்டிப் பகுதியில் இறங்கியவேளை தமிழக மீனவர்கள் வழங்கிய தகவலுக்கமைய தமிழக பொலிஸாரால் கைதுசெய்யப்பட்ட இருவருக்கே இவ்வாறு

11

## இனவாதத்தை களைய பொருத்தமான தருணம் சஜித், அநுரவுடன் தமிழ்த் தரப்பு பேசவேண்டும்!

### தயான் ஜயதிலக்க ஆலோசனை

கொழும்பு, ஏப். 13

உள்நாட்டில் நீண்ட காலமாக அரசியலில் புரையோடிப் போயிருக்கின்ற சிங்கள, பௌத்த தேசிய இனவாதத்தை களைவதற்கு பொருத்தமான தருணம் ஏற்பட்டுள்ள நிலையில் தமிழ் தரப்புக்கள் பிரதான போட்டியாளர்களான சஜித், அநுரவுடன் பேச்சுவார்த்தைகளை முன்னெடுக்கவேண்டும் என்று இராஜதந்திரியான தயான் ஜயதிலக்க தெரிவித்துள்ளார்.

அத்துடன், தமிழர்களின் அரசியல் போக்கு அவரோணகத்தில் சென்று கொண்டிருக்கையில், தமிழ் பொதுவேட்பாளர் ஒருவரை நிறுத்துகின்ற முயற்சியானது பொருத்தமான வியூகமாக அமையப்போவதில்லை என்றும் அவர் சுட்டிக் காட்டினார்.

வடக்கு, கிழக்கைத் தளமாகக் கொண்டு செயல்படும் தமிழ் அரசியல் கட்சிகள்

11

## கோவிட் தொற்று; ஒருவர் மரணம்!

கொழும்பு, ஏப். 13

நாட்டில் மீண்டும் கோவிட் தொற்றால் ஒருவர் உயிரிழந்தார்.

குருநாகல் போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த ஒருவரே கொரோனா தொற்றால் உயிரிழந்தார்.

அவருக்கு நடத்தப்பட்ட

11

உக்ரைனின் விமான தாக்குதல்:

## ரஷ்ய கூலிப்படையில் 2 இலங்கையர்கள் பலி!

கொழும்பு, ஏப். 13

உக்ரைன் இராணுவத்தினரால் நடத்தப்பட்ட ஆளில்லா விமானத் தாக்குதலில் ரஷ்ய இராணுவத்தில் கூலிப்படையாக செயற்படும் இலங்கையர்கள் இருவர் கொல்லப்பட்டுள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை இராணுவத்தின் ஓய்வு பெற்ற இரண்டு இராணுவத்தினரே இவ்வாறு கொல்லப்பட்டுள்ளனர் என அந்த நாட்டிலிருந்து கிடைத்த தகவல்களை மேற்கோள்காட்டி கொழும்பு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

11

# இப்படியும் நடக்கிறது

நேற்றைய தினம் இந்தப் பத்தியில் வடக்கு மாகாண அவைத் தலைவர், தமிழ் பொது வேட்பாளர் குறித்து தெரிவித்திருந்தமை பற்றி எழுதியிருந்தேன்.

அதாவது, ஜனாதிபதி வேட்பாளர் குறித்து சுமந்திரன் கருத்துச் சொன்ன மறுதினமே சிவஞானம் ஐயா கருத்துச் செல்லியதாக எழுதியிருந் தேன். ஆனால், அப்படியல்ல பல நாட்களுக்கு முன்னரே ஓர் இணைய ஊடகம் ஒன்றுக்கு தனது கருத்தைத் தெரிவித்து விட்டேன் என்கிறார் சிவ ஞானம் ஐயா. அந்த ஊடகத் தில் அவர் சொன்னதை அறி யாமல் இருந்தது இந்த ஊர்க்குருவியின் தவறுதான்.

இனி இன்றைய விடயத் துக்கு வருவோம்.

தற்போதைய அரசாங்கத் தில் அமைச்சர்களாகவும் - முக்கிய தலைவர்களாகவும் இருக்கும் சுமார் பன்னிரண்டு பேர் ரணில் தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சியில் விரைவில் இணையவிருக் கின்றனர் என்ற செய்தி தெற் கில் பரபரப்பை ஏற்படுத்தியி ருக்கின்றது.

பிரசன்ன ரணதுங்க, மகிந் தானந்த அளுத்கமகே, ஷெஹான் சேமசிங்க, ரமேஷ் பத்திரண, காஞ்சன விஜய சேகர, பிரமித தென்னகோன், அலி சப்ரி, எஸ். பி. திஸ நாயக்க, பவித்ரா வன்னியா ராச்சி, பந்துல குணவர்த்தன, சுசில் பிரேமஜயந்த, விதுர விக்கிரமநாயக்க ஆகியோரு டன், பிரதமர் தினேஷ் குண வர்த்தனவும் இவ்வாறு கட்சி தாவுவோரில் முக்கியமா னவர்கள் என்கின்றன தெற்கு செய்திகள்.

தமது கட்சியின் முக்கிய தலைவர்களை தமது கட்சி யிலிருந்து பிரித்து எடுக்கும் ரணிலின் முடிவு பெரமுன கட்சிக்குள் பெரும் பூகம்பத் தையே ஏற்படுத்தியிருப்ப தாகவும் குறிப்பாக, அண்மை யில் அதன் தேசிய அமைப்பா ளராக நியமிக்கப்பட்டுள்ள நாமல் ராஜபக்‌ஷவின் அரசி யல் எதிர்காலத்தையே கேள்விக்குறியாக்கி இருப்பதா கவும் கூறப்படுகின்றது.

அண்மைக்காலமாக பொதுஜன பெரமுன விடுத்த எந்த ஒரு கோரிக்கையையும் ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்க கண்டுகொள்ளவில்லை.

கடைசியாக அவர்கள் பாராளுமன்றத் தேர்தலை முன்கூட்டியே வைக்குமாறு விடுத்த கோரிக்கையை ரணில் நிராகரித்ததுடன் இரண்டு தேர்தல்களையும் ஒன்றாக வைக்குமாறு விடுத்த கோரிக் கையையும் நிராகரித்திருந் தார்.

இதனால், ஆத்திரமடைந்த பொதுஜன பெரமுன தமது கட்சி சார்பில் ஒருவரை ஜனா திபதி வேட்பாளராக நிறுத்தப்போவதாக அறிவித்து ரணிலுக்கு அதிர்ச்சி வைத்தி யம் கொடுக்க முனைந்தது.

பெரமுனகாரர்களின் இந்தக் “குடைச்சலை” தாங்கமுடியாத ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அந்தக் கட்சியின் முக்கிய தலைவர் களை தூக்கி எடுத்து தனது கட்சிப் பலத்தை அதிகரிக்க இப்போது முயன்றிருக்கிறார். எப்போதுமே மகிந்த குடும் பத்துக்கு “ஆகாதவராக” இருந்துவந்த சந்திரிகா பண் டாரநாயக்கா குமாரதுங்கவும் ரணிலின் இந்த “ஒப்ரேஷனி”ல் பின்னாலிருந்த உதவினார் என்று ஒரு செய்தி தகவல் தந்தது.

தமது கட்சியின் முக்கிய தலைவர்களை ரணில் பிரித் தெடுப்பது பெரமுனவுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியிருந் தாலும் தமது நீண்டகால நண்பரும் ராஜபக்‌ஷ குடும்பத் தின் மிக நம்பிக்கைக்குரியவரு மான தினேஸ் குணவர்த்தன வும் இவ்வாறு கட்சி தாவ முடிவெடுத்திருப்பதே ராஜ பக்‌ஷ குடும்பத்தில் அதிர் வலைகளை ஏற்படுத்தியிருக் கின்றன என்கின்றன தெற்கின் செய்திகள்.

கோட்டாபய ஆட்சிக் காலத்தின்போது, கோவிட் பெருந்தொற்று காலத்தில், சர்ச்சைக்குரிய பலவந்த தகனக் கொள்கையை ஏற்றுக்கொள் ளுமாறு தம்மைக் கட்டா யப்படுத்தியதாக குற்றம்சாட் டியுள்ள வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரியின் பர பரப்பான குற்றச்சாட்டு இலங்கையின் அரசியலில் பரபரப்பை ஏற்படுத்தியிருந் தது. ஒரு காலத்தில் கோட்டா பய ராஜபக்‌ஷ குடும்பத்தின் தீவிர ஆதரவாளரும் பொது ஜன பெரமுனவின் உறுப்பின ருமான சப்ரி, இப்போது ஐக்கிய தேசியக் கட்சியுடன் தன்னை இணைத்துக்கொண்டு தனது முன்னாள் கூட்டாளி களுக்கு எதிராகப் பேசி வருகி றார். முஸ்லிம்களின் மத நம்பிக்கைக்கு விரோதமாக கோவிட் தொற்றால் மரண மடைந்த முஸ்லிம்களின் ஜனா ஸாக்களை தகனம் செய்த போது அமைச்சராக இருந்த வர் இந்த அலி சப்ரி. அப் போது தன்னை அவர்கள் பலவந்தப்படுத்தினர் என்று அவர் கூறியிருந்தமை கட்சியி லிருந்து வெளியேறும் தனது முடிவுக்கு வலுச் சேர்ப்பதற் காகத்தான் என்கின்றன சில செய்திகள்.

பொதுஜன பெரமுனவி லிருந்து முக்கிய தலைவர்களை ரணில் பிரித்து எடுத்தது பற்றி எழுதியுள்ள ஒரு தெற்கு ஊட கம்:

“பௌத்த - சிங்கள வாக்கா ளர்கள் மத்தியில் மகிந்த ராஜ பக்‌ஷவின் வாக்குத் தளத்தை ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்க குறைத்து மதிப்பிடுவது அவரின் அரசியல் எதிர் காலத்தில் நீண்டகால விளைவு களை ஏற்படுத்தக்கூடிய ஒரு மூலோபாய தவறு.” என்று சுட்டிக்காட்டியிருக்கிறது.

**- ஊர்க்குருவி.**





பிரசித்தி பெற்ற நல்லூர் வடக்கு சந்திரசேகரப் பிள்ளையார் ஆலய பெருந்திருவிழாவில் கைலாய வாகன திருவிழா நேற்றுமுன் தினம் நடைபெற்றபோது...! (படங்கள் - ஆர். ராகவ்)



## குருதிக் கொடை!

யாழ்ப்பாணம், ஏப். 13

கொக்குவில் பொற்பதி இந்து விளையாட்டுக் கழகம் புதுவருடத்தை முன்னிட்டு 20 ஆவது ஆண்டாக குருதிக் கொடை முகாமை இன்று சனிக் கிழமை நடத்துகிறது.

கொக்குவில் பொற்பதி அறி வாலயத்தில் காலை 9 மணிக்கு நடைபெறும் இந்த முகாமில் இளைஞர், யுவதிகளை பங் கேற்று இரத்த தானம் செய்யு மாறு அழைப்பு விடுக்கப்பட் டுள்ளது. (ஐ)

## வாய்க்காலில் நீராடியவர் நீரில் மூழ்கி உயிரிழப்பு!

முல்லைத்தீவு, ஏப். 13

வெள்ள வாய்க்காலில் குளித் தவர் நீரில் மூழ்கி உயிரிழந்தார்.

புதுக்குடியிருப்பு - கை வேலியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

பாலம் அருகே அவர் வழக்க மாக நீராடி வந்த நிலையில் நேற்று முன்தினம் நீராடிய போதே அவர் மூழ்கி உயிரிழந் தார்.

தேவிபுரத்தை சேர்ந்த முனி சாமி திருச்செல்வம் (வயது -57) என்பவரே உயிரிழந்தார்.

நேற்றைய தினம் சடலம் கண்டுபிடிக்கப்பட்ட நிலை யில்,

சம்பவ இடத்துக்கு சென்ற முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி தர்மலிங்கம் பிரதீபன் சட லத்தை பிரேத பரிசோதனைக் காக முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்க உத்தரவு பிறப்பித்தார்.

## நூல்கள் அறிமுகமும் நாடக ஆற்றுகையும்

யாழ்ப்பாணம், ஏப். 13

தேசிய கலை இலக்கிய பேர வையின் 50ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு “நூறு மலர்கள் மலரட்டும்“ என்ற தொனிப்பொருளில் தொடர்ச்சி யாக முன்னெடுக்கப்பட்டு வரும் புத்தக அரங்க விழா இன் றும் நாளையும் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் இடம் பெறவுள்ளது.

இந்த விழாவின் இரண்டா வது நாளானநாளை ஞாயிற்றுக் கிழமை மாலை 3.30 மணியள வில் ஈழத்தின் தலைசிறந்த நாடக ஆசிரியர்களுள் ஒருவ ரான மாவை நித்தியானந்தனின் “இனிச் சரிவராது”, “ஐயா லெக்சன் கேக்கிறார்” நாடக நூல்களின் அறிமுக நிகழ்வு நடைபெறவுள்ளது.

சிரேஷ்ட சட்டத்தரணி சோ.தேவராஜா தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில் “இனிச் சரிவராது” நாடக நூ லுக்கான அறிமுக உரையை மூத்த எழுத்தாளர் அ. யேசு ராசா, “ஐயா லெக்சன் கேக் கிறார்“ நூலுக்கான அறிமுக உரையை யாழ். பல்கலைக் கழகத்தின் சிரேஷ்ட விரிவுரை யாளர் இ. இராஜேஸ்கண்ணன் ஆகியோர் ஆற்றுவர்.

தொடர்ந்து மாலை 5 மணி யளவில் செம்முகம் ஆற்றுகைக் குழுவினரின் தயாரிப்பில் சீல னின் நெறியாள்கையில் மாவை நித்தியானந்தனின் “கோழிக் கர்வம்” சிறுவர் நாடகமும் சண் நாடகக் குழுவினரின் தயாரிப் பில் பு. கணேசராசாவின் நெறி யாள்கையில் மாவை நித்தியா னந்தனின் “முட்டை” நகைச் சுவை நாடகமும் அரங்கேறும்.

### கோப்பாய் - கைதடி வீதி விபத்தில்

## டிப்பர் மோதி படுகாயமுற்ற கல்வி அதிகாரி உயிரிழப்பு!

யாழ்ப்பாணம், ஏப். 13

யாழ்ப்பாணத்தில் இடம் பெற்ற விபத்தில் படுகாயம டைந்த நிலையில் சிகிச்சை பெற்றுவந்த கல்வி அதிகாரி ஒருவர் நேற்று உயிரிழந்தார்.

தென்மராட்சி கல்வி வலய தொழில் வழிகாட்டல் ஆலோ சனை அதிகாரியான 56 வயது டைய கணபதிப்பிள்ளை ஈஸ் வரன் என்பவரே இவ்வாறு உயிரிழந்தார்.

பாடசாலை ஒன்றில் நடை பெற்ற விளையாட்டு போட்டி யில் கலந்து கொள்வதற்காக நேற்று முன்தினம் வியாழக் கிழமை, கோப்பாய் - கைதடி வீதியில் மோட்டார் சைக்கிளில் இவர் பயணித் துள்ளார்.

இதன்போது, எதிரே வந்த டிப்பர் வாகனம் வேக கட்டுப் பாட்டை இழந்து மோட்டார் சைக்கிள் மீது மோதி விபத் துக்குள்ளானது.

விபத்தில் படுகாயமடைந்த வர் சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்று அதிகாலை உயிரிழந்தார்.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ)

ஈழநாடு
Eelanadu
13.04.2024 சனிக்கிழமை
குரோதி வருடம், சித்திரை 01

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# தமிழ் பொது வேட்பாளர் - நிதானம் அவசியம்

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்துவது தொடர்பில் சிவில் சமூகக் குழுக்களும் அரசியல் கட்சிகளும் பேசி வருகின்றன. எனினும், இது தொடர்பில் தமிழ்த் தேசிய கட்சிகள் மத்தியில் இதுவரையில் உத்தியோகபூர்வமான இணக்கப்பாடு எட்டப்படவில்லை. இதன் அவசியத்தை வலியுறுத்தும் நோக்கில் "மக்கள் மனு" - வடக்கு, கிழக்கு சிவில் சமூகக் குழுவானது மக்கள் மத்தியில் சந்திப்புகளை நடத்திவருகின்றது. அந்த வகையில் தமிழ் பொது வேட்பாளர் விடயத்தை மக்கள் எண்ணக்கருவாக மாற்றும் விடயத்துக்கு "மக்கள் மனு" சிவில் சமூகக் குழு தலைமை தாங்கி வருகின்றது.

இது அடிப்படையில் ஒரு வெகுசன ஈர்ப்பை ஏற்படுத்தும் நடவடிகையாகும். கட்சிகளைப் பொறுத்தவரையில் ஐந்து கட்சிகளின் கூட்டமைப்பான ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி மட்டுமே அதன் உத்தியோகபூர்வ நிலைப்பாட்டை வெளிப்படையாக அறிவித்திருக்கின்றது. தமிழ் பொது வேட்பாளர் விடயத்தை கொள்கைரீதியில் ஆதரிப்பதென்று அவர்கள் தீர்மானித்திருக்கின்றனர். இதேவேளை, இலங்கை தமிழ் அரசுக் கட்சி மற்றும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஆகியவற்றுடன் பேசுவதென்றும் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி தீர்மானித்திருக்கின்றது. தமிழ் பொது வேட்பாளர் விடயத்தில் இதுவரையில் நடந்திருப்பது இவைகள் மட்டுமே.

தமிழ்த் தேசிய அரசியல் சூழலைப் பொறுத்தவரையில் கட்சிகளே அரசியலை கையாளும் முதன்மை அங்கமாகும். அவ்வாறான கட்சிகள்மீது அழுத்தங்களை பிரயோகிக்கும் - தேவைப்படும்போது ஓரணியாக இணைந்து செயல்படும் விடயங்களையே சிவில் சமூக குழு ஒன்றால் மேற்கொள்ள முடியும். இதேவேளை கட்சிகள் தமிழ் மக்களின் நலன்சார் விடயங்களை தேசம் தழுவியதாக முன்னெடுக்கும்போது சிவில் சமூகக் குழுக்கள் மற்றும் தமிழ்த் தேசிய நிலைப்பாடுடைய புத்திஜீவிகளையும் இணைத்துக் கொண்டே விடயங்களை முன்னெடுக்க வேண்டும்.

தமிழ் பொது வேட்பாளர் விடயத்தைப் பொறுத்தவரையில் அனைத்து கட்சிகளும் ஓரணியாக நிற்பதே இந்த விடயத்தில் வெற்றி பெறுவதற்கான முதல் படியாகும். ஒரு குறித்த தனிக்கட்சி விடயங்களை முன்னெடுப்பதாகக் காண்பிப்பது பொருத்தமானதல்ல. அவ்வாறான முயற்சிகள் விடயத்தின்மீதான கட்சிகளின் ஈடுபாட்டை பலவீனப்படுத்துவதுடன் தேவையற்ற சந்தேகங்களையும் கட்சிகள் மத்தியில் ஏற்படுத்தும். இந்த விடயத்தில் மக்கள் மனு சிவில் சமூகத்தின் அணுகுமுறை நிதானமானதாகவும் அனைவரையும் சமநிலையில் கையாளுவதாகவும் இருக்கின்றது. அவ்வாறான அணுகுமுறைதான் இந்த விடயத்துக்குத் தேவையானது.

தமிழ் பொது வேட்பாளர் யார்?, எந்தச் சின்னத்தில் போட்டியிடுவது?, இதற்கான கட்மைப்புகளை எவ்வாறு உருவாக்குவது? இப்படியான கேள்விகள் இப்போது அவசியமற்றவை. முதலில் தமிழ்த் தேசிய அரசியலை பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகளில் பெரும்பாலானவை ஓரணியில் வரவேண்டும். அதனைத் தொடர்ந்து, கட்சிகளின் பிரதிநிதிகளும் சிவில் சமூகப் பிரதிநிதிகளும் இணைந்ததாக விடயங்களை நெறிப்படுத்துவதற்கான கட்டமைப்பு தொடர்பில் சிந்திக்கலாம்.

ஆனால், விடயங்கள் ஒரு சரியான திசையில் பயணிப்பதற்கு முன்பதாகவே கட்டமைப்பு - குறிப்பாக நிதி தொடர்பில் பேசுவதானது இந்த விடயத்தை முன்னோக்கி நகர்த்துவதற்கு உறுதுணையாக இருக்காது. இவ்வாறான விடயங்களை கருத்தில் கொண்டே அனைவரும் இந்த விடயத்தை கையாள முற்பட வேண்டும்.

தமிழ் பொது வேட்பாளர் விடயம் சாதாரணமான ஒன்றல்ல, தமிழ் மக்களின் நிலைப்பாட்டை வெளிப்படுத்துவதற்கு கிடைத்திருக்கும் ஓர் அரிய சந்தர்ப்பம். அளவுக்கதிகமான சமையல்காரர்கள் இணைந்து உணவைப் பழுதாக்கியதாக இந்த முயற்சி அமைந்துவிடக்கூடாது.

# அறச்சிந்தனை உடைய தலைமையை எமது மண்ணில் வளர்த்தெடுப்போம்!

## புதுவருட ஆசி செய்தியில் ஆறு. திருமுருகன்

*யாழ்ப்பாணம், ஏப். 13*

அர்ப்பணிப்பு மிக்க அறச்சிந்தனை உடைய தலைமைத்துவத்தை எம்மண்ணில் வளர்த்தெடுப்போம் என்று செஞ்சொற் செல்வர் ஆறு. திருமுருகன் விடுத்துள்ள புதுவருட வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.



மேலும், அனைவருக்கும் எனது இதயபூர்வமான புத்தாண்டு வாழ்த்துகள் உரித்தாகுக. குரோதி வருசம் பிறக்கிறது. இந்த வருடத்தில் எல்லோரும் இன்புற்று வாழ இறைவனை மன்றாடுவோம். புதிய ஆண்டில் உலகம் முழுவதும் தர்மம் நிலைத்திட வேண்டுதல் செய்வோம். கடந்த ஆண்டில் நாம் விட்ட தவறுகளை எண்ணி இனிமேலும் அந்தத் தவறுகள் தொடராமல் இருக்க எம்மை நாம் ஒழுங்குபடுத்திக் கொள்வோம். அரிய பிறவியாகிய மானிடப் பிறவியின் மகத்துவத்தை உணர்ந்து வாழ்நாளை பேணிப் பாதுகாப்போம்.

புதிய ஆண்டு பிறக்கும் வேளை திருக்கோவில்களுக்குச் சென்று குடும்பம் குடும்பமாக வழிபாடு செய்வோம். உற்றார், உறவினர்கள், நண்பர்களுக்கும் வாழ்த்தைத் தெரிவித்து உறவை வலிமைப்படுத்துவோம்.

உதவியற்று இருப்பவர்களுக்கு உறுதுணை செய்வோம். கோபத்தை மறந்து அன்பைப் பெருக்குவோம். பெற்றோர்களுக்குரிய கடமையைப் பேணிப் பாதுகாப்போம். எங்கள் பிள்ளைகளை சரியான வழியில் ஆற்றுப்படுத்துவோம்.

எங்கள் மண்ணில் நீதியும் நிம்மதியும் நிலைத்திட அனைவரும் ஒன்றுபட்டு உழைப்போம். அர்ப்பணிப்பு மிக்க அறச்சிந்தனை உடைய தலைமைத்துவத்தை எம்மண்ணில் வளர்த்தெடுப்போம். எமது பாரம்பரியமான பண்பாட்டு நெறிமுறைகளை காத்திட முயல்வோம். அன்பர்கள் அனைவருக்கும் இதயபூர்வமான புத்தாண்டு வாழ்த்துகளையும் நல்லாசிகளையும் தெரிவித்து அமைகின்றேன் - என்று அவர் அனுப்பி வைத்த வாழ்த்து செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

(ஐ)

# தமிழர் மீதான விரோத செயல்களுக்கு முற்றுப்புள்ளி ஆண்டாக அமையட்டும்!

## இந்து சமயப் பேரவை புதுவருட வாழ்த்து

*யாழ்ப்பாணம், ஏப். 13*

பிறக்கும் புதுவருடம் தமிழ் மக்கள்மீது திணிக்கப்படும் மொழி, மத விரோத செயல்பாடுகளுக்கு முற்றுப்புள்ளி வைப்பதாக அமையட்டும் என்று இந்து சமயப் பேரவை விடுத்துள்ள புத்தாண்டு செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



குரோதி வருட பிறப்பு இன்று சனிக்கிழமை இரவு வேளை பிறக்கிறது. இதையொட்டி இந்து சமய பேரவையின் தலைவர் சிவ. சக்திகிரீவன் விடுத்த வாழ்த்துச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டவை வருமாறு,


மலரும் குரோதி வருடப்பிறப்பு வாழ்த்துகளை அனைவருக்கும் தெரிவிப்பதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றோம். இந்தப் புத்தாண்டு தமிழ் மக்கள்மீது திணிக்கப்படும் மொழி, மத விரோத செயல்பாடுகளுக்கு முற்றுப்புள்ளி வைப்பதாக அமைய எல்லாம் வல்ல சிவ பரம்பொருளைப் பிரார்த்திக்கின்றோம்.

கடந்த காலத்தில் மேற்கொண்ட பௌத்த மேலாதிக்க செயல்பாடுகள் இந்துக்கள் மனதில் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. அனைத்து இன, மத மக்களின் உணர்வுகளை மதிக்கும் இந்துக்களை புண்படுத்தும் வகையில் மேற்கொள்ளப்படும் அனைத்துச் செயல்பாடுகளும் நிறுத்தப்படவேண்டும்.

நடந்து முடிந்த போரால் கணவரை இழந்த பெண்களும் மனைவியை இழந்த கணவனும் பெற்றோரை இழந்த பிள்ளைகளும் உற்றாரை இழந்த உறவினருமாக தமிழ் நிலமே துன்பத்தில் இருக்கிறது. வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோருக்கு உரிய தீர்வு கிடைக்கப் பெறவில்லை. இத்தகைய சூழலில் மலரும் புத்தாண்டு அனுபவித்த துன்பங்களுக்கு நிரந்தர தீர்வைக் தரும் ஆண்டாக அமைய எல்லாம் வல்ல ஆடல்வல்லானைப் பிரார்த்திக்கின்றோம் - என்றுள்ளது.

(ஐ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



ஏப்ரல் - 13 சனிக்கிழமை
குரோதி வருடம் - சித்திழரை 01
நல்ல நேரம் : 07.30 - 08.30
ராகு காலம் : 09.00 - 10.00
திதி : பஞ்சமி




**மேடம்**
உற்சாகமாக எதையும் முன்னின்று செய்வீர்கள். பிள்ளைகளின் பிடிவாதம் தளரும். வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் வரும். பணிகளை விரைந்து முடிப்பீர்கள். புதிய பாதை தெரியும் நாள்.

**இடபம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் சிலரின் விமர்சனங்களுக்கும் கேலிப் பேச்சிற்கும் ஆளாவீர்கள். வேலையாட்களை பகைத்துக் கொள்ளாதீர்கள். நேர்மறை எண்ணங்கள் தேவைப்படும் நாள்.

**மிதுனம்**
விலை உயர்ந்த பொருட்களை கவனமாக கையாளுங்கள். வியாபாரத்தில் போட்டிகளை சமாளிப்பீர்கள். உத்தியோகத்தில் விவாதம் வரக்கூடும். அதிகம் உழைக்க வேண்டிய நாள்.

**கடகம்**
பெற்றோரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். புதிய கோணத்தில் யோசித்து பழைய பிரச்னைகளுக்கு தீர்வு காண்பீர்கள். உத்தியோகத்தில் முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். சிறப்பான நாள்.

**சிம்மம்**
உறவினர்கள் நண்பர்கள் ஆதரவாகப் பேசத் தொடங்குவார்கள். விலகி நின்றவர்கள் விரும்பி வருவார்கள். வியாபாரத்தை பெருக்குவீர்கள். உத்தியோகத்தில் புது வாய்ப்புகள் தேடி வரும்.

**கன்னி**
கணவன்-மனைவிக்குள் அன்யோன்யம் பிறக்கும். பாதியில் நின்ற வேலைகள் முடியும். உத்தியோகத்தில் உங்கள் உழைப்பிற்கு அங்கீகாரம் கிடைக்கும். புது அத்தியாயம் தொடங்கும் நாள்.

**துலாம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் உங்களை அறியாமலே ஒருவித படபடப்பு தாழ்வுமனப்பான்மை வந்து செல்லும். அதிகாரிகளுடன் பனிப்போர் வந்து நீங்கும். பொறுமை தேவைப்படும் நாள்.

**விருட்சிகம்**
மனைவி வழியில் அனுகூலம் உண்டு. புதியவரின் நட்பால் உற்சாகமடைவீர்கள். வியாபாரத்தில் கூடுதல் லாபம் கிடைக்கும். சக ஊழியர்களுக்கு உதவுவீர்கள். எதிர்பாராத நன்மைகள் உண்டாகும்.

**தனுசு**
விஜபிகள் அறிமுகமாவார்கள். அரசால் அனுகூலம் உண்டு. உத்தியோகத்தில் உயரதிகாரிகள் அதிசயிக்கும் படி நடந்துக் கொள்வீர்கள். வியாபாரத்தில் சில நுணுக்கங்களை கற்றுக் கொள்வீர்கள்.

**மகரம்**
நட்பு வட்டம் விரியும். நீண்ட நாள் பிரார்த்தனையை நிறைவேற்றுவீர்கள். வியாபாரத்தில் வேலையாட்கள் மதிப்பார்கள். எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும். புதுமை படைக்கும் நாள்.

**கும்பம்**
பயணங்களால் அலைச்சல் இருந்தாலும் ஆதாயமும் உண்டாகும். வியாபாரத்தில் பங்குதாரர்களின் பிரச்னை தீரும். சக ஊழியர்களால் நிம்மதி கிடைக்கும். தேவைகள் பூர்த்தியாகும் நாள்.

**மீனம்**
குடும்பத்தாரின் எண்ணங்களை கேட்டறிந்து பூர்த்தி செய்வீர்கள். வியாபாரத்தில் அதிரடியான திட்டங்களை தீட்டுவீர்கள். அதிகாரிகளுக்கு நெருக்கமாவீர்கள். நினைத்ததை முடிக்கும் நாள்.

# பா. ஜ. க. மீளவும் ஆட்சிக்கு வந்தால் ஜனநாயக முறைமையே இருக்காது!

## திருமாவளவன் எச்சரிக்கை

*சென்னை, ஏப். 13*

"மீண்டும் பா. ஜ. க. ஆட்சி அதிகாரத்துக்கு வந்துவிட்டால் இந்தியாவில் பாராளுமன்ற ஜனநாயக முறையே இருக்காது. இந்தியாவை சர்வாதிகார ஆட்சி முறைக்குக் கொண்டு செல்வதே அவர்களின் 'ஒரே நாடு ஒரே தேர்தல்' என்ற திட்டத்தின் அடிப்படையாகும்." என்று விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தலைவர் திருமாவளவன் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் நேற்று விடுத்துள்ள அறிக்கையில், "அம்பேத்கர் இயற்றித் தந்த அரசமைப்புச் சட்டத்தை ஒழிப்பதையே மோடி அரசு தனது இலக்காக வைத்துள்ளது. இந்த பாராளுமன்றப் பொதுத் தேர்தலில் 400 இடங்களுக்கு மேல் கைப்பற்றி மக்களவையில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையைப் பெற்றுவிட்டால் அரசமைப்புச் சட்டத்தின் அடிப்படையான அம்சங்களில் ஒன்றான 'மத சார்பற்ற நாடு' என்பதை மாற்றி இந்தியாவை "மதம் சார்ந்த நாடு" என அறிவிப்பதற்கும்,

மீண்டும் மனு நூலின் அடிப்படையில் வருண வேற்றுமையை சட்டபூர்வமாக ஆக்குவதற்கும் திட்டமிட்டுள்ளது. இதனை வெளிப்படையாகவே பாஜகவைச் சேர்ந்த தலைவர்கள் இந்தத் தேர்தல் பரப்புரையில் பல இடங்களில் தெரிவித்து வருகின்றனர்.

இந்திய அரசமைப்புச் சட்டம் வயது வந்தோருக்கு வாக்குரிமையை வழங்கி உள்ளது. ஒருவருக்கு ஒரு வாக்கு, ஒவ்வொரு வாக்குக்கும் ஒரே மதிப்பு என்ற கோட்பாட்டின் அடிப்படையில் அரசியல் சமத்துவத்தை அரசமைப்புச் சட்டம் ஏற்படுத்தி உள்ளது. அதனை அழித்தொழித்து மீண்டும் மனுநூலில் அடிப்படையில் நாட்டை ஆள்வதற்கும், இந்திய சமூகத்தைப் பிறப்பின் அடிப்படையில் ஏற்றத்தாழ்வு கொண்ட சமூகமாக சட்டரீதியாக மாற்றி அமைப்பதற்கும் பாஜகவும், ஆர்.எஸ்.எஸ் இயக்கமும் முற்படுகின்றன.

அதற்காகவே இந்தத் தேர்தலில் அதிக இடங்களில் வெற்றி பெற வேண்டும் என்று அவர்கள் கூறி வருகின்றனர். அவர்களது நோக்கம் நிறைவேறிவிட்டால், அதாவது மீண்டும் பா. ஜ. க. பாசிசக் கும்பல் ஆட்சியதிகாரத்துக்கு வந்துவிட்டால் இந்தியாவில் பாராளுமன்ற ஜனநாயக முறையே இருக்காது. இந்தியாவை சர்வாதிகாரம் கொண்ட அதிபர் ஆட்சி முறைக்குக் கொண்டு செல்வதே அவர்களின் 'ஒரே நாடு ஒரே தேர்தல்' என்ற திட்டத்தின் அடிப்படையாகும் - என்றார். (ஐ)

# போதைப்பொருட்களால் தமிழகத்தை பாழாக்குகிறது ஸ்டாலின் குடும்பம்!

## அமைச்சர் நிர்மலா சாடல்

*ஒசூர், ஏப். 13*

"போதைப் பொருட்கள் மூலம் கிடைக்கும் ஆதாயத்தில் பிழைக்கக்கூடிய எந்தக் குடும்பமும் வாழ்ந்தது இல்லை. முதல்வரின் குடும்பத்துக்கு உதயசூரியன் உதிக்கிறதோ இல்லையோ தமிழகத்தில் உதிக்கக் கூடாது" என்று பா. ஜ. க. பிரசாரப் பொதுக் கூட்டத்தில் மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் பேசினார்.

மேலும், "போதைப் பொருட்களை இறக்குமதி செய்து இளைஞர்களின் வாழ்க்கையை முழுவதுமாக பாழாக்க நினைக்கும் முதல்வரின் குடும்பத்தை நாம் மீண்டும ஒருமுறை தெரிவுசெய்யக்கூடாது" என்று அவர் கூறினார்.

போதைப் பொருட்கள் மூலமாக கோடி கோடியாக சம்பாதித்து தனது குடும்பம் வாழ வேண்டும் என நினைக்கிறார்கள். போதைப்பொருட்கள் மூலம் வரக்கூடிய ஆதாயத்தில் பிழைக்கக்கூடிய எந்தக் குடும்பமும் வாழ்ந்தது இல்லை. பிறரின் வாழ்க்கையைக் கெடுத்து, அதன் மூலம் வரக்கூடிய ஆதாயம் தமிழகத்துக்கு வேண்டவே வேண்டாம். எந்த குடும்பத்துக்கும் வேண்டாம்.

போதைப் பொருட்கள் மூலம் ஆதாயம் வைத்துக்கொண்டு அரசியல் செய்யக் கூடிய குடும்பத்தை இந்தத் தேர்தலில் நாம் நிராகரித்து தோற்கடிக்க வேண்டும். உதயசூரியன் அவர்களது குடும்பத்துக்கு உதிக்கிறோதோ இல்லையோ தமிழகத்துக்கு உதிக்கக் கூடாது - என்றார். (ஐ)

# மேகதாது அணை தொடர்பாக ஸ்டாலின் மௌனம் காப்பது ஏன்?

## அன்புமணி ராமதாஸ் கேள்வி

*சென்னை, ஏப். 13*

"மத்தியில் இந்தியா கூட்டணி ஆட்சி அமைத்தால் மேகதாது அணை கட்டப்படும் என சித்தராமையா பேசி மூன்று நாட்களாகியும் முதல்வர் ஸ்டாலின் மௌனம் ஏன்?" என்று பா. ம. க. தலைவர் அன்புமணி ராமதாஸ் கேள்வி எழுப்பியுள்ளார்.

"மத்தியில் காங்கிரஸ் தலைமையிலான "இந்தியா" கூட்டணி ஆட்சி அமைந்தால் காவிரி ஆற்றின் குறுக்கே மேகதாது அணை கட்டப்படும் என்று கர்நாடக முதல்வர் சித்தராமையா கூறியிருக்கிறார். சித்தராமையாவின் இந்த பேச்சு கண்டிக்கத்தக்கது.

காவிரி நடுவர் மன்றத் தீர்ப்பின்படியும் உச்சநீதிமன்றத் தீர்ப்புகளின்படியும் காவிரி ஆற்றின் குறுக்கே தமிழகத்தின் ஒப்புதல் இல்லாமல் எந்த அணையும் கட்ட முடியாது. உண்மை நிலை இவ்வாறு இருக்க மத்தியில் காங்கிரஸ் ஆட்சி அமைந்தால் மேகதாது அணை கட்டப்படும் என்று சித்தராமையா கூறுவது மத்திய அரசின் அதிகாரத்தை தவறாகவும் தமிழகத்துக்கு எதிராகவும் பயன்படுத்துவது ஆகும்.

காங்கிரஸ் ஆட்சியில் மேகதாது அணையை கட்டியே தீருவோம் என்று சித்தராமையா அறிவித்து 3 நாட்களாகியும், அதேகூட்டணியில் இருக்கும் தமிழக முதல்வர் மு. க. ஸ்டாலின் எதிர்ப்போ, கண்டனமோ தெரிவிக்கவில்லை. அவர் அமைதியாக இருப்பதன் பொருள் காங்கிரஸின் நலன்களுக்காகவும், கர்நாடகத்தின் நலன்களுக்காகவும் காவிரியில் தமிழகத்தின் உரிமைகளை தாரைவார்க்கத் துணிந்து விட்டார் என்பதுதான் - என்று கூறினார். (ஐ)

# அண்ணாமலைமீது வழக்குப் பதிவு!



*கோவை, ஏப். 13*

கோவையில் தேர்தல் நடத்தை விதிகளை மீறி பிரசாரம் செய்தார் என்று பா. ஜ. க. வேட்பாளர் அண்ணாமலை மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது.

மக்களவைத் தேர்தலுக்கான வாக்குப்பதிவு திகதி நெருங்குவதைத் தொடர்ந்து அரசியல் கட்சிகளின் வேட்பாளர்கள் தங்களது பிரசாரத்தை தீவிரப்படுத்தியுள்ளனர்.

இந்நிலையில், கோவை மக்களவை தொகுதி பாஜக வேட்பாளர் அண்ணாமலை நேற்றுமுன்தினம் இரவு 10.40 மணி வரை அவர் பிரசாரம் செய்தார் என்று வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. (ஐ)

# தேசிய மக்கள் சக்தியினரும் விடுதலைப் புலிகளும் ஒன்றே!

## கூறுகின்றார் நாமல் ராஜபக்ஷ

கொழும்பு, ஏப். 13

**தமிழீழ விடுதலை புலிகள் அமைப்பிற்கும் தேசியமக்கள் சக்திக்கும் பாரிய வித்தியாசம் கிடையாது என பொது ஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

கட்சியை மறுசீரமைத்து தேர்தலில் பொதுஜன பெரமுனவை வெற்றியடையச் செய்வதே எமது எதிர்பார்ப்பாகும்.

நாட்டின் இறைமை கலாசாரம் நாட்டு மக்களைப் பாதுகாக்கும் வேலைத்திட்டங்களுடன் முன்னோக்கிச் செல்வோம்.

தேசிய பொருளாதாரத்தை வலுப்படுத்துவதற்கான வேலைத் திட்டங்களை நாட்டிற்கு தற்போது தேவைப்படுகின்றது. பொறுப்பு வாய்ந்த அரசியல் வாதிகள் என்ற ரீதியில் பொது ஜன பெரமுன சார்பில் பொருத்தமான ஒருவரை நாம் தெரிவு செய்வோம்.

மக்கள் நம்பிக்கையை வெற்றி கொண்ட ஒருவரே பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளராக தெரிவு செய்யப்படுவார். கட்சியின் தேசிய அமைப்பாளர் என்ற ரீதியில் எனக்கு பாரிய பொறுப்பு உள்ளது.

எனவே கட்சியை கட்டியெழுப்புவதற்கான நடவடிக்கையினை முன்னெடுப்பதற்கான நடவடிக்கையினையே முன்னெடுத்துள்ளேன்.

தமிழீழ விடுதலை புலிகள் அமைப்பிற்கும் தேசிய மக்கள் சக்திக்கும் பாரிய வித்தியாசமில்லை. நாம் இந்த நாட்டை வீணடிக்கவில்லை.



பஸ்ஸூக்கு நாம் தீவைக்கவில்லை. அப்பாவி மக்கள் பௌத்த மதகுருமார் மீதும் நாம் தாக்குதல் மேற்கொள்ளவில்லை.

இவ்வாறான சம்பவங்களுடன் ஒப்பிடுகையில் தமிழீழ விடுதலை புலிகள் அமைப்பிற்கும் தேசிய மக்கள் சக்திக்கும் பாரிய வித்தியாசமில்லை என்றே தெரிகின்றது-என்றார். (அ)

# புதுவருட கால பஸ் சேவையால் 25 மில்லியன் ரூபா வருமானம்!

ප්‍රවාහන හා මහාමාර්ග අමාත්‍යාංශය
போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு
MINISTRY OF TRANSPORT AND HIGHWAYS

கொழும்பு, ஏப். 13

சிங்கள மற்றும் தமிழ் புத்தாண்டு காலத்தை முன்னிட்டு இடம்பெறும் பஸ் சேவையின் மூலம் நாளாந்த வருமானம் 25 மில்லியன் ரூபாவினால் அதிகரித்துள்ளதாக இலங்கை போக்குவரத்து சபை தெரிவித்துள்ளது.

இந்த நாட்களில் கிராமங்களுக்கு செல்லும் மக்களுக்காக கடந்த 5ஆம் திகதி முதல் சுமார் 200 கூடுதல் பஸ்கள் இயக்கப்பட்டு சிறப்பு போக்குவரத்து சேவையை ஆரபிக்கப்பட்டுள்ளது என இலங்கை போக்குவரத்து சபையின் பிரதி பொது முகாமையாளர் பண்டுக ஸ்வர்ணஹன்ச தெரிவித்தார்.

இதேவேளை, நெடுஞ்சாலைகளின் வருமானம் நேற்று முன்தினம் 10 வீதத்தால் அதிகரித்துள்ளதாக வீதி அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

15ஆம் திகதிக்கு இடையில் நெடுஞ்சாலைகளின் வருமானம் கணிசமான அளவு உயர்வாகவும் சாத்தியமாகுமென எதிர்பார்க்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது

இதற்கிடையில்,நீண்ட தூர ரயில் சேவைகள் தவிர, கடந்த 10 ஆம் திகதி முதல் ஏப்ரல் 15 ஆம் திகதி வரை 12 கூடுதல் ரயில்கள் சேர்க்கப்பட்டுள்ளன.

அதன்படி பதுளைக்கு 02 ரயில்கள் பதுளையிலிருந்து கொழும்புக்கு 02 ரயில்கள், காலிக்கு 02 ரயில்கள், காலியிலிருந்து கொழும்புக்கு 02 ரயில்கள், பெலியத்தவிற்கு 02 ரயில்கள் மற்றும் பெலியத்தவிலிருந்து கொழும்புக்கு 02 ரயில்கள் என இந்த ரயில் சேவைகள் இடம்பெறவுள்ளன. (அ)

## தடையின்றி எரிபொருள் விநியோகம்

கொழும்பு, ஏப். 13

தமிழ்-சிங்கள புத்தாண்டு காலப்பகுதியின்போது சிபெட்கோ எரிபொருள் நிலையங்களினால் தொடர்ந்தும் எரிபொருள் விநியோகம் செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

நாட்டின் எரிபொருள் தேவையை பூர்த்தி செய்வதற்காக எரிபொருள் இருப்புக்களை இறக்குமதி செய்து, பிரதான முனையங்களில் உள்ள களஞ்சியசாலைகளில் போதிய இருப்புக்களை பராமரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும், எரிபொருள் இருப்புக்களை பராமரிப்பது குறித்து அனைத்து எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் கூட்டுத்தாபனம் சுட்டிக்காட்டியுள்ளது.

இதேவேளை, விநியோகஸ்தர்களின் எரிபொருள் முன்பதிவு செய்யும் பணியை எளிதாக்கும் வகையில், காசோலை மூலம் பரிவர்த்தனை செய்ய எதிர்வரும் 15ஆம் திகதி வரை அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

இந்த காலப்பகுதியில், எரிபொருள் விநியோக நடவடிக்கைகளுக்காக போதுமான எரிபொருள் பௌசர்களை ஈடுபடுத்த இலங்கை பெற்றோலிய சேமிப்பு முனைய நிறுவனம் தீர்மானித்துள்ளதாக பெற்றோலிய கூட்டுத்தாபனம் குறிப்பிட்டுள்ளது. (அ)

# மன்னார் மாவட்டத்தில் இடம்பெறும் மணல் அகழ்வு தொடர்பில் ஆராய்வு

மன்னார், ஏப். 13

மன்னார் மாவட்டத்தில் இடம்பெறும் மணல் அகழ்வு தொடர்பான விசேட கலந்துரையாடல் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன் தலைமையில் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

குறித்த கலந்துரையாடலில் மன்னார் மாவட்டத்தில் உள்ள ஐந்து பிரதேச செயலகங்களின் பிரதேச செயலாளர்கள், சுற்றுச்சூழல் தொடர்பான அமைப்புகளின் பிரதிநிதிகள், திணைக்கள தலைவர்கள், மன்னார் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றிய தலைவர் மற்றும் பிரஜைகள் குழுவின் தலைவர், கடற்படையினர் பொலிசார் மற்றும் மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

இக் கலந்துரையாடலில் மாவட்டத்தில் முன்னெடுக்கப்படுகின்ற சட்டபூர்வமான மற்றும் சட்ட விரோதமான மணல் அகழ்வு தொடர்பாக விரிவாக கலந்துரையாடப்பட்டது.

குறிப்பாக மாவட்டத்தில் தற்போது நடைமுறையில் இருக்கும் மணல் அகழ்வு அனுமதிப் பத்திரங்கள் சிலவற்றை தற்காலிகமாக இடை நிறுத்துவது என்றும் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் தலைமையில், மணல் அகழ்வு செய்யப்படுகின்ற இடங்களை கள விஜயம் மேற்கொண்ட பின்னர் அனுமதி வழங்குவது என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சியாக சட்டவிரோதமான மண்அகழ்வு இடம்பெற்று வருவதாகவும், சட்டவிரோத மண் அகழ்வு மக்களுக்கு பாரிய இடையூறாக இருப்பதாகவும் பொது மக்கள் முன்வைத்த குற்றசாட்டுகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

வெளி மாவட்டங்களில் இருந்து தனி நபர்களால் மன்னார் மாவட்டத்தில் சட்டவிரோத மண் அகழ்வு இடம்பெறுவதாகவும் இதனை தடுப்பதற்காக சில திணைக்களங்களுக்கு எழுத்து மூலம் அறிவிப்பதாகவும், அவர்களுக்கான அனுமதி பத்திரங்களை உடனடியாக இரத்து செய்வதாகவும் மாவட்ட அரசாங்க அதிபரால் தெரிவிக்கப்பட்டது.

வேறு திணைக்களங்களால் வழங்கப்படுகின்ற அனுமதிப் பத்திரங்கள் அனைத்தும் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் தலைமையிலான குழுவினால் மேற்பார்வை செய்யப்பட்டதன் பின்னரே அவ்விடங்களில் அனுமதி வழங்க முடியும் எனவும் அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

மேலும் மண்அகழ்வு போக்குவரத்து அனுமதிப் பத்திரங்களை வேறு மாவட்டத்தில் இருந்து வழங்கும் போது ஏ32 பாதையில் அனுமதித்திரம் வழங்க முடியாது எனவும் இவ்வாறு வழங்குவதால் சட்டவிரோத மணல் அகழ்வு அதிகரிப்பதாகவும் சுட்டிக்காட்டப்பட்டது.

## அரசியலிலிருந்து ஓய்வு பெறுவதாக மொட்டு கட்சியின் எம்.பி. அறிவிப்பு

கொழும்பு, ஏப். 13

இன்னும் நான்கு மாதங்களில் அரசியலில் இருந்து ஓய்வுபெறவுள்ளதாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் விமலவீர திஸாநாயக்க தெரிவித்தார்.

அத்துடன், அடுத்த தேர்தலில் தான் போட்டியிடப்போவதில்லை என்ற அறிவிப்பையும் அவர் விடுத்துள்ளார்.

அம்பாறையில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார். (அ)

# சட்டவிரோதமாக கொண்டு வரப்பட்ட பொருட்களுடன் மூன்று பேர் கைது!

கொழும்பு, ஏப். 13

சட்டவிரோதமான முறையில் நாட்டுக்குக் கொண்டு வரப்பட்ட ஒரு கோடி ரூபாவுக்கும் அதிக பெறுமதியுடைய பொருட்களுடன் மூன்று பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து குற்றப்புலனாய்வு திணைக்கள அதிகாரிகளால் அவர்கள் நேற்று கைது செய்யப்பட்டுள்ளனர்.

வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட மதுபான போத்தல்கள், சிகரெட்டுகள், அப்பிள் ஸ்மார்ட் கைப்பேசிகள், தொலைபேசி உதிரி பாகங்கள் உள்ளிட்ட பல மின்னணு சாதனங்களுடன் குறித்த மூவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மினுவாங்கொடை, மஸ்கெலியா மற்றும் கொழும்பு 13 பகுதிகளில் வசிக்கும் மூன்று பேரினால் இந்த பொருட்கள் இலங்கைக்குக் கொண்டு வரப்பட்டுள்ளன.

கைப்பற்றப்பட்ட பொருட்களும் அவற்றை சட்டவிரோதமாக இலங்கைக்குக் கொண்டு வந்த மூன்று பேரும் மேலதிக விசாரணைகளுக்காக கட்டுநாயக்க விமான நிலைய சுங்க அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (அ)

# ஜனாதிபதி வேட்பாளர் குறித்து கருத்துக் கூற பொதுஜன பெரமுனவின் எம்.பிக்களுக்கு தடை!

கொழும்பு, ஏப். 13

ஜனாதிபதித் தேர்தல் குறித்து மொட்டுக் கட்சி எம்.பிக்கள் முரண்பட்ட கருத்துக்களை வெளியிட்டுவந்த நிலையில், முறையான முடிவு எடுக்கும் வரை எந்தவொரு ஜனாதிபதி வேட்பாளருக்கும் தங்கள் ஆதரவு குறித்து எம்.பிக்கள் கருத்து தெரிவிக்க மொட்டு கட்சித் தலைமை தடைவிதித்துள்ளது.

கொழும்பில் நடைபெற்ற பொதுஜன பெரமுன கட்சியின் கூட்டத்தில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி வேட்பாளருக்கான ஆதரவு விவகாரத்தில் மொட்டுக் கட்சி பிளவுபட்டுள்ளது. அரசில் பதவிகளை வகிப்பவர்கள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை வெளிப்படையாக ஆதரிக்கின்றனர். அவர்களில் அமைச்சர்களான சுசில் பிரேம ஜயந்த, பிரசன்ன ரணதுங்க மற்றும் அலி சப்ரி ஆகியோர் அடங்கு கின்றனர். மற்றொரு பிரிவினர் சொந்த வேட்பாளரை நிறுத்த வேண்டும் என வலியுறுத்துகின்றனர். இதேவேளை, மொட்டுக் கட்சியின் விதிமுறைகளை மீறி, ஏனைய கட்சிகளுடன் இணைந்து செயல்படுபவர்களுக்கு எதிராகக் கடும் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கவும் கட்சி தீர்மானித்துள்ளது. (அ)

# அரியாலை தனியார் காணிக்குள் கொட்டப்படும் மருத்துவக் கழிவு!

## அப்பகுதி மக்கள் திரண்டு கடும் எதிர்ப்பு







**யாழ்ப்பாணம், ஏப். 13**

**யாழ். போதனா வைத்தியசாலையின் மருத்துவக் கழிவுகள் அரியாலைப் பகுதியில் உள்ள தனியார் காணி ஒன்றில் எரியூட்டப்பட்டு வந்த நிலையில்-இதற்கு எதிர்ப்பு தெரிவித்து அப்பகுதி மக்களால் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.**

அரியாலை பகுதியில் உள்ள தனியார் காணிக்குள் யாழ். போதனா வைத்தியசாலையின் மருத்துவக் கழிவுகள் தீ மூட்டப்பட்டு அழிக்கப்பட்டுள்ளமையை அயலவர்கள் கண்டறிந்துள்ளனர்.

அதனை அடுத்து, வைத்தியசாலை நிர்வாகத்தின் பொறுப்புவாய்ந்த அதிகாரி சம்பவ இடத்துக்கு நேரில் வந்து பொறுப்பு கூறி, அவற்றை அங்கிருந்து அகற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் என அங்கு கடமையில் இருந்த பாதுகாப்பு உத்தியோகத்தர் ஊடாக அறிவித்துள்ளனர்.

இது தொடர்பாக பொலிஸாருக்கும் தகவல் வழங்கப்பட்டுள்ளது. எனினும், பொலிஸார் மற்றும் வைத்தியசாலை நிர்வாகத்தினர் மூன்று மணி நேரம் கடந்தும் சம்பவ இடத்துக்கு வருகை தராத காரணத்தினாலேயே, மக்கள் இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

யாழ்.-கண்டி நெடுஞ்சாலையை மறித்து இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதனால், குறித்த பகுதியின் ஊடான போக்குவரத்தும் சிறிது நேரத்துக்கு பாதிக்கப்பட்டிருந்ததோடு சர்ச்சையான சூழலும் ஏற்பட்டது.

போராட்டத்தைத் தொடர்ந்து சம்பவ இடத்துக்கு வருகை தந்த யாழ்ப்பாணப் பிரிவுக்கு பொறுப்பான பொலிஸ் உதவி அத்தியட்சகர், மக்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி, உரிய பிரச்னைக்குத் தீர்வு வழங்கப்படும் என உறுதியளித்திருந்தார்.

இதன்போது யாழ். போதனா வைத்தியசாலையில் பணிப்பாளர் மருத்துவர் த.சத்தியமூர்த்தியும் சம்பவ இடத்துக்கு சென்று போராட்டக்காரர்களுடன் உரையாடினார்.

இதனையடுத்து மருத்துவக் கழிவுகள் கொண்டப்பட்டுள்ள குறித்த காணியை, பொலிஸாருடன் யாழ். போதனா வைத்தியசாலையில் பணிப்பாளர் மருத்துவர் சத்தியமூர்த்தி சென்று பார்வையிட்டார்.

எனினும், குறித்த பகுதியை பார்வையிட ஊடகவியலாளர்களுக்கு பொலிஸார் அனுமதி மறுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# பொலிஸ் அதிகாரிகளுக்கு பரிசுத் தொகை அறிவிப்பு!

கொழும்பு, ஏப். 13

மதுபோதையில் வாகனம் செலுத்தும் நபர்களை கைது செய்யும் பொலிஸ் அதிகாரிகளுக்கு பரிசு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோனின் அறிவுறுத்தலின் பேரில் இது இடம்பெறவுள்ளது.

இதன்படி, மதுபோதையில் வாகனம் செலுத்தும் ஒருவரை கைது செய்யும் பொலிஸ் அதிகாரிகளுக்கு ஐயாயிரம் ரூபா வழங்கப்படும் என பிரதி பொலிஸ் மா அதிபர் தெரிவித்தார்.

இதேவேளை, சிங்கள மற்றும் தமிழ் புத்தாண்டு தினத்தன்று மதுபோதையில் வாகனம் செலுத்துவோரை கண்டறிவதற்காக அனைத்து பொலிஸ் நிலையங்களுக்கும் ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் இரத்த பரிசோதனை கருவிகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

# விசேட அதிரடிப்படை வீரர் மீது மன்னாரில் வைத்து தாக்குதல்!

## 17 வயது இளைஞன் கைது

மன்னார், ஏப். 13

குற்றச் செயல் ஒன்றுக்குத் தயாராகிக் கொண்டிருந்த நபர்களை கைதுசெய்ய முயன்ற விசேட அதிரடிப்படை வீரர் மீது கொலைவெறித் தாக்குதல் நடத்த முயன்ற 17 வயது இளைஞனொருவர் மன்னாரில் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த சம்பவமானது, மன்னார் பெரிய கரிசல் பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

குற்றச் செயல் ஒன்றைப் புரிவதற்காக தயார் நிலையில் இருந்த நபர் ஒருவரை கைது செய்வதற்காக விசேட அதிரடிப்படையினர் மன்னார் பெரிய கரிசல் பிரதேசத்தில் திடீர் சுற்றிவளைப்பு நடத்தியுள்ளனர்.

இதன் போது குறித்த சந்தேக நபரிடமிருந்து கூரிய வாள், மூன்று கத்திகள் மற்றும் 500 மில்லிகிராம் ஐஸ் போதைப் பொருள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

அதனையடுத்து 40 வயதான சந்தேக நபரும் விசேட அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டார்.

குறித்த சந்தர்ப்பத்தில் கைது செய்யப்பட்ட நபரின் உறவினரான 17 வயது இளைஞன் ஒருவர் கத்தியால் விசேட அதிரடிப்படையினர் மீது கொலை வெறித் தாக்குதலை நடத்த முயன்றதையடுத்து அவரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதன் போது காயத்திற்குள்ளான விசேட அதிர அதிரடிப் படை வீரர் ஒருவர் காயமடைந்து மன்னார் பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். (அ)

# இலங்கை கண்டனம்!

கொழும்பு, ஏப். 13

சிரியாவின் தலைநகர் டமாஸ்கஸில் அமைந்துள்ள ஈரான் துணைத் தூதரகம் மீதான இஸ்ரேலின் தாக்குதலை இலங்கை கண்டித்துள்ளது.

இந்த நிலையில் தூதரக வளாகங்களைப் பாதுகாப்பது தொடர்பான வியன்னா உடன்படிக்கையை கடைப்பிக்குமாறும் இலங்கை இஸ்ரேலிடம் கோரியுள்ளது.

வெளிவிவகார அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிராந்தியத்தில் ஏற்பட்டுள்ள கொந்தளிப்பான நிலைமையை மேலும், அதிகரிக்காமல், நிதானத்தைக் கடைப்பிடிக்கவும், வன்முறையினை பயன்படுத்துவதைத் தவிர்க்கவும், சம்பந்தப்பட்ட அனைத்து தரப்பினரையும் வலியுறுத்த விரும்புவதாக இலங்கை வெளிவிவகார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

முன்னதாக சிரியாவில் உள்ள ஈரான் தூதரகம் மீது இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் பலர் கொல்லப்பட்டனர்.

இதனையடுத்து இந்த தாக்குதலுக்கு பதிலடி கொடுக்க ஈரான் தயாராகி வருவதாக தகவல்கள் கிடைத்துள்ளதாக அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (அ)

# வீசா காலம் முடிந்தும் இலங்கையில் தங்கியிருக்கும் வெளிநாட்டவர்கள்!

## ஆதரவளிக்கும் உள்ளூர்வாசிகள் கைதுசெய்யப்பட வேண்டுமென வலியுறுத்தல்

கொழும்பு, ஏப். 13

இலங்கையில் 2,400 இற்கும் மேற்பட்ட வெளிநாட்டவர்கள் தமது விசா காலம் கடந்தும் நாட்டில் தங்கியுள்ளதாக குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம் தெரிவித்துள்ளது.

இலங்கையில் சுற்றுலாத் துறையுடன் தொடர்புடைய வர்த்தகத்தில் ஈடுபடும் வெளிநாட்டவர்கள் தொடர்பில் பாராளுமன்றத்தில் இடம்பெற்ற அரசாங்க கணக்குகள் பற்றிய குழு எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே திணைக்களம் இந்த விடயத்தை தெரிவித்துள்ளது.

இதனிடையே, வெலிகம பிரதேசத்தில் பல ரஷ்ய மற்றும் உக்ரேனிய பிரஜைகள் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதாக சுற்றுலாத்துறை இராஜாங்க அமைச்சர் டயானா கமகே தெரிவித்துள்ளார்.

இந்த விடயத்தில் உடனடி தீர்வு காணாத நிலையில், மிகவும் ஆபத்தான நிலைமை ஏற்படக்கூடும் என உள்ளூர் வர்த்தகர்கள் எச்சரித்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், தென் மாகாணத்தில் இஸ்ரேலியர்களும் வர்த்தக நடவடிக்கையில் ஈடுபடுவதாக தமக்கு தகவல் கிடைத்துள்ளதாக தெரிவித்த டயானா கமகே, இந்த வர்த்தக நடவடிக்கைகளுக்கு ஆதரவளிக்கும் உள்ளூர் வாசிகளை உடனடியாக கைது செய்ய வேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளார். (அ)

# வெற்றிலை பறிக்க மரத்தில் ஏறியவர் கிணற்றுக்குள வீழ்ந்து உயிரிழப்பு!

கொழும்பு, ஏப். 13

பலாங்கொடை பிரதேசத்தில் வெற்றிலை பறிப்பதற்காக மரத்தில் ஏறிய நபரொருவர் அருகிலிருந்த கிணற்றில் தவறி வீழ்ந்து உயிரிழந்துள்ளதாக பலாங்கொடை பொலிஸார் தெரிவித்தனர்.

52 வயதுடைய மூன்று பிள்ளைகளின் தந்தையே உயிரிழந்துள்ளார்.

புத்தாண்டு தினத்தை முன்னிட்டு வெற்றிலை பறிப்பதற்காக தோட்டத்தில் உள்ள 40 அடி உயரமுடைய மரமொன்றில் ஏறி வெற்றிலை பறிக்க முயன்றுள்ளார்.

இதன்போது, இந்த மரத்தின் கிளை ஒன்று முறிந்து வீழ்ந்துள்ள நிலையில் மரத்தில் ஏறியிருந்தவர் அருகிலிருந்த கிணற்றுக்குள் தவறி வீழ்ந்து உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# புலனாய்வு அமைப்புகளின் பலவீனமே குற்றச் சம்பவங்களுக்கு முழு காரணம்!

கொழும்பு, ஏப். 13

நாட்டின் புலனாய்வு அமைப்புகள் மற்றும் பாதுகாப்புப் படையினரின் பலவீனமே துப்பாக்கிச் சூடு மற்றும் குற்றச் சம்பவங்களுக்கு காரணம் என மிஹிந்தலை ரஜமஹா விகாரையின் பீடாதிபதி வணக்கத்துக்குரிய வலஹங்குனவே தம்மரத்ன தேரர் தெரிவித்துள்ளார்.

அனுராதபுரம் பிரதேசத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அந்த துறைகளை பலப்படுத்தாமல் குற்றச்செயல்களை கட்டுப்படுத்துவது சாத்தியமில்லை எனவும் அவர் குறிப்பிட்டார். (அ)

# வறிய மக்கள் மீதான தாக்கம் அவதானம் செலுத்த வேண்டும்

## ஆசிய அபிவிருத்தி வங்கி சுட்டிக்காட்டு

கொழும்பு, ஏப். 13

**பொருளாதார நெருக்கடிக்கு அடிப்படையாக அமைந்த காரணிகளைக் களைவதற்கும், நிலையான மீட்சிக்கான அடித்தளத்தை இடுவதற்கும், மீண்டெழும் தன்மையைக் கட்டியெழுப்புவதற்கும், வளர்ச்சியை அடைந்துகொள்வதற்கும் தற்போதைய மறுசீரமைப்புக்களை தொடர்ந்து நடைமுறைப்படுத்தவேண்டும் எனவும், வறிய மற்றும் நலிவுற்ற சமூகப் பிரிவினர் மீது ஏற்பட்டுள்ள தாக்கம் தொடர்பில் கவனம் செலுத்தவேண்டியது மிக அவசியம் எனவும் ஆசிய அபிவிருத்தி வங்கி இலங்கையை வலியுறுத்தியுள்ளது.**

ஆசிய அபிவிருத்தி வங்கியினால் வெளியிடப்பட்டுள்ள 2024 ஏப்ரல் மாதத்துக்கான ஆசிய அபிவிருத்தி மதிப்பீட்டின்படி, கடந்த இருவருடங்களாகத் தொடர்ந்து அவதானிக்கப்பட்ட பொருளாதாரச்சுருக்கத்தை அடுத்து இவ்வருடம் இலங்கை 1.9 சதவீத மிதமான வளர்ச்சியையும், 2025 இல் 2.5 சதவீத வளர்ச்சியையும் பதிவு செய்யும் என எதிர்வு கூறப்பட்டுள்ளது.

"கடந்த ஆண்டின் பின்னரை பாகத்திலிருந்து இலங்கையில் பொருளாதார மீட்சிக்கான குறிகாட்டிகள் தென்படுகின்றன. பணவீக்கம் ஓரிலக்கப்பெறுமதிக்கு வீழ்ச்சியடைந்துள்ளது.

வெளிநாட்டுக்கையிருப்பின் பெறுமதி தொடர்ச்சியாக அதிகரித்துவருகின்றது. நாணயமாற்றுவிகிதம் உயர்வடைந்துள்ளது.

சுற்றுலாத்துறை மற்றும் வெளிநாட்டுப்பண வனுப்பல்கள் மூலமான வருமானம் தொடர்ந்து சாதக மட்டத்தில் பதிவாகிவருகின்றது. உரியகாலத்தில் வெளியகக் கடன்மறுசீரமைப்பைப் பூர்த்தி செய்வதானது இலங்கையின் கடன் ஸ்திரத்தன்மையை உறுதிப்படுத்துவதற்கு உதவும்" என ஆசிய அபிவிருத்தி வங்கி சுட்டிக்காட்டியுள்ளது.

அதேவேளை மிகக்கடினமான கொள்கை மறுசீரமைப்புக்களை நடைமுறைப்படுத்துவதிலும், 2023 இல் நாட்டின் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்துவதிலும் இலங்கை பாராட்டத்தக்க வகையிலான முன்னேற்றத்தைக் காண்பித்திருப்பதாக ஆசிய அபிவிருத்தி வங்கியின் இலங்கைக்கான பிரதிப்பணிப்பாளர் உட்சவ் குமார் தெரிவித்துள்ளார்.

"மீட்சிக்கான குறிகாட்டிகளுடன் இணைந்ததாக இந்த மறுசீரமைப்புக்கள் மூலம் கிடைத்துள்ள பெறுபேறுகள் குறித்து நாம் மகிழ்ச்சியடைகின்றோம்.

இருப்பினும் வறிய மற்றும் நலிவுற்ற சமூகப்பிரிவினர்மீது ஏற்பட்டுள்ள தாக்கம் தொடர்பில் இலங்கை கவனம் செலுத்த வேண்டியது மிக அவசியமாகும்.

அதேபோன்று இந்த நெருக்கடிக்கு அடிப்படையாக அமைந்த காரணிகளைக் களைவதற்கும், நிலையான மீட்சிக்கான அடித்தளத்தை இடுவதற்கும், மீண்டெழும் தன்மையைக் கட்டியெழுப்புவதற்கும், வளர்ச்சியை அடைந்துகொள்வதற்கும் தற்போதைய மறுசீரமைப்புக்களை தொடர்ந்து நடைமுறைப்படுத்தவேண்டும்" எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

பொருளாதார மீட்சிக்கு மத்தியில் வறுமையைக் கையாள்வதென்பது இலங்கை முகங்கொடுத்திருக்கும் மிக முக்கிய சவால் எனவும், கொவிட் - 19 வைரஸ் பெருந்தொற்று மற்றும் பொருளாதார நெருக்கடி போன்றவற்றின் விளைவாக வறுமை நிலை தீவிரமடைந்திருப்பதாகவும் குறிப்பிட்டுள்ள ஆசிய அபிவிருத்தி வங்கி, நாட்டின் பொருளாதாரம் ஸ்திரமடையும் வேளையில், மிகமோசமாகப் பாதிக்கப்பட்ட நலிவுற்ற சமூகப்பிரிவினர் பாதுகாக்கப்படுவதையும், உயர் வறுமை மற்றும் வருமான சமத்துவமின்மை என்பன உரியவாறு கையாளப்படுவதையும் அரசாங்கம் உறுதிப்படுத்த வேண்டும் எனத் தெரிவித்துள்ளது.

(அ)



# நல்லூரில் உள்ளூர் உற்பத்தியாளர்களின் விசேட புத்தாண்டுக் கண்காட்சி ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஏப். 13

யாழ். மாவட்ட உள்ளூர் முயற்சியாளர் சங்கத்தின் ஏற்பாட்டில், தமிழ் சிங்கள புதுவருடத்தை முன்னிட்டு உள்ளூர் உற்பத்திகளை ஊக்குவிக்கும் நோக்கில் உள்ளூார் உற்பத்தி முயற்சியாளர்களின் கண்காட்சி நேற்று முன்தினம் ஆரம்பமாகியது. காலை 9 மணி தொடக்கம் மாலை 7 மணி வரை யாழ்ப்பாணம் நல்லூர் சங்கிலியன் சிலைக்கருகில் உள்ள கிட்டு பூங்காவில் இன்று சனிக்கிழமை வரை இது இடம்பெற்றவுள்ளது.

யாழ்.மாவட்டத்தின் பல்வேறு பிரதேசங்களில் இருந்தும் பங்கேற்றுள்ள சிறுதொழில் முயற்சியாளர்கள் தங்களது உணவு உற்பத்திகள், பனைசார் உற்பத்திகள், காலணிகள், தைத்த ஆடைகள், பெண்களுக்கான கைப்பைகள், பூங்கன்றுகள் என பல்வேறு உற்பத்திகளையும் காட்சிப்படுத்தியுள்ளனர்.

இக்கண்காட்சியில் பொது மக்கள் ஆர்வத்துடன் பங்கேற்று பொருள்களை கொள்வனவு செய்து வருகின்றனர்.

தொழில்துறை திணைக்களம், கைத்தொழில் அபிவிருத்தி சபை, சிறுதொழில் அபிவிருத்தி முயற்சி பிரிவு, விதாதா வள நிலையம் போன்ற திணைக்களங்களோடு சேர்ந்து யாழ் மாவட்ட செயலகம், ஆளுநர் அலுவலகம், யாழ் மாநகர சபையின் பூரண ஒத்துழைப்போடு இக்கண்காட்சி இடம்பெற்று வருகின்றது. (அ)

# தீபச்செல்வனிடம் விசாரணை

கிளிநொச்சி, ஏப். 13

எழுத்தாளர் தீபச்செல்வனை பயங்கரவாத விசாரணை பிரிவினர் நேற்று முன் தினம் விசாரணைக்கு உட்படுத்தியுள்ளனர்.

ஈழத்தின் மூத்த எழுத்தாளர் நா. யோகேந்திரநாதனின் நாவல் வெளியீட்டு நிகழ்வை நடத்தியமைக்காகவே இவ்வாறு விசாரணை இடம்பெற்றது. புத்தகம் விடுதலைப் புலிகள் இயக்கத்தை மீள உருவாக்கும் நோக்கில் எழுதப்பட்டதா என்றும் விசாரணையின் போது கேட்கப்பட்டது. இதேவேளை குறித்த புத்தகத்தின் வெளியீட்டு விழாவை நீங்கள் ஏன் நடத்தினீர்கள் என்று கேட்டார்கள்.

கிளிநொச்சியின் மூத்த எழுத்தளார் நா. யோகேந்திரநாதனை மதிப்பளிப்பு செய்யும் நோக்கிலேயே வெளியீட்டு விழாவை நடத்தியதாக கூறினேன். நேற்று முன் தினம் காலை 11மணிக்கு ஆரம்பிக்கப்பட்ட விசாரணை சுமார் இரண்டரை மணி நேரத்திற்கும் மேலாக இடம்பெற்றது என தீபச்செல்வன் தெரிவித்துள்ளார்.

(அ)

# 4ஆவது மாடியிலிருந்து விழுந்து பெண் மரணம்

கொழும்பு, ஏப். 13

பம்பலப்பிட்டியில் உள்ள அடுக்குமாடி குடியிருப்பின் நான்காவது மாடியில் இருந்து குடிபோதையில் விழுந்து 86 வயதுடைய பெண் ஒருவர் உயிரிழந்துள்ளதாக பம்பலப்பிட்டி பொலிஸார் தெரிவித்தனர். இந்த பெண் கடந்த புதன்கிழமை மாலை அடுக்குமாடி குடியிருப்பின் நான்காவது மாடியில் இருந்து குதித்து பலத்த காயங்களுக்கு உள்ளானார். களுபோவில வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் அவர் உயிரிழந்துள்ளார்.

பாதிக்கப்பட்ட பெண் தனது முதல் திருமணத்திலிருந்து மூத்த மகனுடன் இந்த குடியிருப்பில் வசித்து வந்துள்ளார், மேலும் அவர் மனநலம் பாதிக்கப்பட்டவர் என்று தெரியவந்துள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இவருக்கு இரண்டாவது திருமணத்தில் ஒரு மகன் உள்ளதாகவும், அவருடன் நிலத்தகராறு தொடர்பான வழக்கும் நீதிமன்றத்தில் நடைபெற்று வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

(அ)

# உமா ஓயா பல்நோக்கு திட்டத்தில் தாமதம்!

## 200 பில்லியன் ரூபா நட்டம்

கொழும்பு, ஏப். 13

உமா ஓயா பல்நோக்கு அபிவிருத்தித் திட்டத்தின் தாமதம் காரணமாக 200 பில்லியன் ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளது.

இத்திட்டத்துக்கு 2010 ஆம் ஆண்டு 529 மில்லியன் அமெரிக்க டொலர்கள் செலவீனமாக மதிப்பிடப்பட்டதாக மின்சக்தி மற்றும் எரிசக்தி இராஜாங்க அமைச்சர் இந்திக்க அனுருத்த தெரிவித்துள்ளார்.

2008 ஆம் ஆண்டு இந்த திட்டத்திற்கு அமைச்சரவை அனுமதியளித்ததை அடுத்து 2010 ஆம் ஆண்டில் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன.

தற்போது உமா ஓயா பல்நோக்கு அபிவிருத்தித் திட்டத்தின் பணிகள் முழுமையாக நிறைவடைந்துள்ளன.

இந்நிலையில் உமா ஓயா பல்நோக்கு அபிவிருத்தி திட்டம் இம்மாதம் 24 ஆம் திகதி அல்லது 25 ஆம் திகதிகளில் மக்களிடம் கையளிக்கப்படவுள்ளதாக மின்சக்தி மற்றும் எரிசக்தி இராஜாங்க அமைச்சர் இந்திக்க அனுருத்த கூறினார்.

ஈரான் அரசின் அனுசரணையுடன் திறப்பு விழா இடம்பெறவுள்ளதுடன் இதன்போது ஈரான் ஜனாதிபதி இப்ராஹிம் ரைசி காணோளி பங்கேற்பார்



என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதற்கான நடவடிக்கைகளை வெளிவிவகார அமைச்சு மேற்கொண்டு வருவதாக இராஜாங்க அமைச்சர் தெரிவித்துள்ளார். இந்தத் திட்டத்தின் மூலம் 120 மெகாவாட் நீர் மின்சாரம் தேசிய அமைப்பில் இணைக்கப்படவுள்ளது.

(அ)

# ரயிலில் இருந்து தவறி விழுந்த சிறுமி

கொழும்பு, ஏப். 13

கொழும்பில் இருந்து மட்டக்களப்பு நோக்கி பயணித்த ரயிலில் இருந்து தவறி விழுந்த பன்னிரெண்டு வயது சிறுமி ஒருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.


உறவினர் வீட்டுக்குச் சென்றுவிடு திரும்பிக் கொண்டிருந்த நிலையிலே இந்த விபத்து நேர்ந்துள்ளது.

படுகாயமடைந்த சிறுமி வெலிகந்தை பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக பொலனறுவை வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வெலிகந்தை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# துடுப்பாட்ட மட்டைகளை தயாரித்து ஏற்றுமதி செய்யும் தமிழ் இளைஞன்!





**மட்டக்களப்பு, ஏப். 13**

**மட்டக்களப்பில் இளைஞர் ஒருவர் மென்பந்து கிரிக்கெட் விளையாட்டிற்கான துடுப்பாட்ட மட்டையை தயாரித்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்து வருகின்றார்.**

**உதயகுமார் நிதர்சன் என்ற 30 வயதுடைய தமிழ் இளைஞனே தனது திறமையை உலகறிய செய்து சாதனை படைக்கின்றார்.**

மட்டக்களப்பு செங்கலடி - கொம்மாந்துறை பகுதியை சேர்ந்த உதயகுமார் நிதர்சன் விளையாட்டுத்துறையில் ஆர்வம் உள்ளவர். இவர் சுமார் 07 வருடங்களாக விளையாட்டுத் துறை சார்ந்து, துடுப்பாட்ட மட்டை, விக்கெட், மரத்தினால் ஆன நினைவுச் சின்னங்கள், உள்ளிட்ட விளையாட்டுடன் தொடர்புடைய உபகரணங்களை மரத்தினால் செய்து வருகின்றார்.

காலப்போக்கில் அந்த முயற்சியால் இன்று தான் தயாரிக்கும் துடுப்பாட்ட மட்டை நாடு கடந்து சர்வதேசம் வரை செல்வதாக தெரிவிக்கின்றார்.

ஓரிரு துடுப்பாட்ட மட்டை தயாரித்து தற்போது ஆயிரக்கணக்கில் தயாரித்து பாகிஸ்தான் நாட்டிற்கு ஏற்றுமதி செய்யும் அளவுக்கு மாறியுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

தற்போது பாகிஸ்தான் நாட்டில் இருந்த வருகை தந்துள்ள வெளிநாட்டவர்கள், சுமார் 6ஆயிரம் கிரிக்கெட் மட்டையை குறித்த இளைஞரிடம் செய்து தருமாறு தெரிவித்து அதை எடுத்துச் செல்ல அங்கேயே தங்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அதுமட்டுமன்றி பாகிஸ்தான், ஜேர்மனி, இந்தியா, கனடா ஆகிய பல நாடுகளுக்கு இவரது உற்பத்திகள் செல்கின்றதாகவும் தெரிவித்தார்.

இந்த வேலைத்திட்டத்தில் தனது சகோதரர்கள் இருவர் உட்பட ஏழு பேர் வேலை செய்வதாகவும், மட்டக்களப்பில் இவ்வாறு தயாரிப்பது முதல் தடவை என்பதுடன், போதிய வளம் இருப்பின் இதனை மேலும் மேம்படுத்தி பலருக்கு வேலைவாய்ப்பை தன்னால் வழங்க முடியும் என அவர் குறிப்பிட்டார். (அ)

# மட்டக்களப்பு இந்துக் கல்லூரியில் நடந்த செயன்முறை தொழில்நுட்ப செயலமர்வு

மட்டக்களப்பு, ஏப். 13

மட்டக்களப்பு இந்துக் கல்லூரியில், புதிய கல்வி சீர்திருத்தம் தொடர்பான செயன்முறை தொழில்நுட்பத்திறன் பாடத்திற்கான முதற்கட்ட செயலமர்வு நேற்று முன் தினம் பாடசாலை அதிபர் கே.பகிரதன் தலைமையில் நடைபெற்றது.

கிழக்கு மாகாணத்திலிருந்து செய்முறை தொழிநுட்பத் திறன் பாடத்தின் கீழ், வாழ்க்கைக்கான தொழிநுட்பவியல் திட்ட பாடத்திட்டத்திற்கு, மட்டக்களப்பு இந்து கல்லூரி தெரிவு செய்யப்பட்டுள்ளது.

முதற்கட்ட செயலமர்வில், கோட்டக் கல்வி அதிகாரி ஆர். ஜே.பிரபாகரன், செய்முறை தொழிநுட்பத் திறன் பாட பொறுப்பாசிரியர் உமா சந்திர மோகன்,

செயற்றிட்ட பொறுப்பாளர் பெரியதம்பி ரஜனி மற்றும் தரம் 6 மாணவர்கள், அவர்களின் பெற்றோர்கள், ஆசிரியர்களும் பங்கேற்றனர்.

தரம் 6 மாணவர்களும், மாணவர்களின் பெற்றோர்களுக்கும் செய்முறை தொழிநுட்பத் திறன் தொடர்பான விழிப்புணர்வூட்டலும் கையேடுகளும் வழங்கப்பட்டன. (அ)

# மட்டக்களப்பு ஆனைப்பந்தி மகளிர் கல்லூரியின் தமிழ் மொழி தின விழா

மட்டக்களப்பு, ஏப். 13

மட்டக்களப்பு ஆனைப்பந்தி இந்து மகளிர் கல்லூரியின் தமிழ் மொழி தின விழா நேற்று முன் தினம் சிறப்பாக நடைபெற்றது.

கல்லூரி அதிபர் நிமாலினி பேரின்பராஜா தலைமையில், கல்லூரி ஆசிரியர்களின் ஒழுங்கமைப்பில் பாடசாலை மட்டத்தில், தமிழ் மொழி தின விழா இடம்பெற்றது.

கல்லூரி மாணவிகளின் கலாசார வாத்திய இசையுடன் அதிதிகள் பாடசாலை பிரதான மண்டபத்திற்கு அழைத்து வரப்பட்டு, மங்கள விளக்கேற்றலுடன் தமிழ் தாய் வாழ்த்து இசைக்கப்பட்டு, வரவேற்பு நடனத்துடன் விழா ஆரம்பமானது.

நிகழ்வில் ஆன்மீக அதிதியாக ஆனைப்பந்தி ஸ்ரீசித்தி விக்னேஸ்வரா ஆலய பிரதம குரு கலந்து கொண்டார்.

கல்வி திணைக்கள அதிகாரிகள், பாடசாலை அபிவிருத்தி குழு உறுப்பினர்கள், பாடசாலை ஆசிரியர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள் என பலரும் நிகழ்வில் பங்கேற்றனர்.

பாடசாலை மட்டத்தில் இடம்பெற்ற தமிழ் மொழி தின போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு வெற்றி சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

# நீர் நிரம்பிய வாளிக்குள் வீழ்ந்து 2 1/2 வயது குழந்தை உயிரிழப்பு!

**ஆரையம்பதி பகுதியில் துயரச் சம்பவம்**

மட்டக்களப்பு, ஏப். 13

காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மாவிலங்கடித்துறை, ஆரையம்பதி பகுதியில் சிறுமி ஒருவர் நீர் வாளியினுள் தவறுதலாக வீழ்ந்து மரணமடைந்துள்ளார்.

மாவிலங்கடித்துறையில் கடந்த திங்களன்று தனது வீட்டு முற்றத்தில் சகோதரர்களுடன் விளையாடிய இரண்டரை வயதுச் சிறுமியைக் காணாது தேடிய தாயார், வீட்டு முற்றத்தில் இருந்த நீர்நிறைந்த வாளியினுள் சிறுமி வீழ்ந்து கிடப்பதைக் கண்டு, உடனேயே, ஆரையம்பதி பிரதேச வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்ற போதிலும் சிகிச்சை பலனின்றி சிறுமி உயிரிழந்துள்ளதாக ஆரம்ப கட்ட விசாரணையில் தெரிய வந்தது.

மட்டக்களப்பு மாவட்ட நீதிமன்ற நீதவானின் பணிப்புரைக்கமைவாக, காத்தான்குடி பிரதேச திடீர் மரண விசாரணை அதிகாரி வேலு மணிமாறன், ஆரையம்பதி வைத்தியசாலைக்கு சென்று பிரேதத்தை பார்வையிட்ட பின்னர். உடற்கூற்று பரிசோதனைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லுமாறு பொலிஸாருக்கு அறிவித்தார்.

உடற்கூற்று பரிசோதனையின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (அ)

# திருகோணமலையில் புதையல் தோண்டியவர்கள் 13 பேர் கைது!

திருமலை, ஏப். 13

திருகோணமலை மொரவௌ பொலிஸ் பிரிவில், புதையல் தோண்டிய குற்றச்சாட்டின் பேரில் நேற்று முன் தினமிரவு 13 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸ் நிலையத்திற்கு கிடைக்கப் பெற்ற தகவலுக்கு அமைவாக குறித்த சந்தேக நபர்களை கைது செய்துள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

சந்தேக நபர்களில் நால்வர் மொரவௌ பொலிஸ் பிரிவுக்குட்பட்டவர்கள் என்றும் ஏனையவர்கள் இரத்தினபுரி, கேகாலை மற்றும் தெவனிபிய வர பகுதிகளில் வசித்து வரும் 21 வயதுக்கும் 52 வயதுக்கும் உட்பட்டவர்கள் என தெரிய வந்துள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் தொடர்பில் தனித்தனியாக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு, சட்ட நடவடிக்கைக்கும் உட்படுத்தப் படவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# திக்கோடையில் நெற்செய்கைக்கு புதிய தொழில்நுட்பம் அறிமுகம்!

மட்டக்களப்பு, ஏப். 13

மட்டக்களப்பு மாவட்டத்தின் திக்கோடை விவசாய போதனாசிரியர் பிரிவின் புதுவட்டை கண்டத்தில் விவசாய போதனாசிரியர் எஸ். சசிகுமார் தலைமையில் நாற்று நடும் இயந்திரத்தின் மூலமும், பரசூட் முறையிலும், சாதாரண வீசிவிதைத்தலிலும் ஒப்பீட்டு ரீதியிலான முன்மாதித்துண்ட செய்கை நிகழ்வு நடைபெற்றது.

இந்நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட பிரதி விவசாய பணிப்பாளர் எம். பரமேஸ்வரன் பிரதம அதிதியாக கலந்து கொண்டதுடன், உதவி விவசாய பணிப்பாளர் திருமதி நித்தியா நவரூபன், பாடவிதான உத்தியோகத்தர்களான திருமதி லாவண்யா செந்தீபன், லக்ஸ்மன், மாறன் ஆகியோருடன் தெற்கு வலய விவசாய போதனாசிரியர்கள் தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் பிரதேச செயலக அபிவிருத்தி உத்தியோகத்தர், கமநல சேவை நிலையத்தின் அபிவிருத்தி உத்தியோகத்தர் மற்றும் விவசாயிகள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

இதே நிகழ்வு மாவடிமுன்மாரி கிராமத்திலும் தொழில்நுட்ப உதவியாளர் துஷாந்தின் ஏற்பாட்டில் நடைபெற்றது.

பரசூட் முறையிலான நெற்செய்கை, நாற்று நடும் இயந்திரத்தின் மூலமான நாற்றுநடுகையின் நன்மைகள் பற்றிய தெளிவான விளக்கங்களுடன் இம் முறைகளில் பயன்படுத்தப்படும் தொழில்நுட்பங்கள் என்பன முறையான செய்து காட்டல்



கள் மூலம் விவசாய போதனாசிரியர்களால் விளக்கமளிக்கப்பட்டது.

ஏற்கனவே பரசூட் தட்டுக்களில் இடப்பட்ட நாற்றுகள் நடுகை செய்யப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

# மிகப்பெரும் மின் நிலையத்தை உக்ரைனில் அழித்தது ரஷ்யா!

## 2 ஆண்டுகளில் மிகப்பெரிய தாக்குதல்

கீவ், ஏப். 13

**உக்ரைன் தலைநகரான கீவ் மீது ரஷ்யா நடத்திய ஆளில்லா விமானத் தாக்குதலில், அந்நாட்டின் மிகப்பெரிய மின் உற்பத்தி நிலையம் முற்றாக அழிவடைந்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.**

**உக்ரைனில் அதிகளவான மக்கள் தொகைக் கொண்ட நகரமும், அந்நாட்டின் தலைநகரமுமான கிவ் மீதே ரஷ்யா இத் தாக்குதலை நடத்தியுள்ளது.**

இதனால், கீவ் நகரிலுள்ள ட்ரிபிலியா எனப்படும் மின் உற்பத்தி நிலையம் முற்றாக அழிவடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த மின் உற்பத்தி நிலையத்திலிருந்தே அந்நாட்டின் மூன்று பிரதான பகுதிகளுக்கும் மின்சாரம் விநியோகிக்கப்பட்டுள்ளது.

கடந்த இரு ஆண்டுகளில், ரஷ்யா நடத்திய மிகப்பெரிய தாக்குதல் இதுவென ரொய்ட்டர் செய்தி சேவை தெரிவித்துள்ளது.

இந்நிலையில், ரஷ்யா இராணுவத்தின் பலத்தினை வெளிப்படுத்தும் நோக்கில் சில தாக்குதல்களை ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின், திட்டமிட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

உக்ரைனின் குறித்த மின் உற்பத்தி நிலையத்திலிருந்து அதிகளவாக புகை வெளியேறும்



காணொளிகள் சமூக வலைத்தளங்களில் தற்போது வெளியாகியுள்ளன.

இந்தத் தாக்குதலையடுத்து உக்ரைனிலுள்ள பல இடங்கள் நேற்று முன்தினம் குறி வைக்கப்பட்டு தாக்கப்பட்டுள்ளன.

ரஷ்யாவின் 80 இற்கும் மேற்பட்ட ஏவுகணை மற்றும் ஆளில்லா விமானங்கள் மூலம் இந்த தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக சர்வதேச செய்திகள் தெரிவித்துள்ளன.

உக்ரைனின் உள்ளூர் கட்டமைப்புக்களை குறிவைத்தே ரஷ்யா இந்த தாக்குதலை மேற்கொண்டுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

# ஈரான் விமான சேவையை ரத்துச் செய்தது ஜேர்மனி!

## போர்ப் பதற்றம் காரணமாக




பேர்லின், ஏப். 13

ஜேர்மன் விமான சேவை நிறுவனமான லுப்தான்சா, ஈரான் தலைநகரான தெஹ்ரானுக்கான விமான சேவையை சனிக்கிழமை வரை நிறுத்துவதாக அறிவித்துள்ளது.

மத்திய கிழக்கு நாடுகளில் நிலவும் சூழலால் இந்த முடிவை எடுத்ததாக லுப்தான்சா தெரிவித்துள்ளது.

ஜேர்மனின் பிராங்க்போர்ட் நகரில் இருந்து தெஹ்ரானுக்கு வாரத்திற்கு 5 விமானங்கள் இயக்கப்பட்டு வருகின்றன.

முன்னதாக நேற்று முன்தினம் வியாழக்கிழமை வரை அறிவிக்கப்பட்டிருந்த விமான சேவை ரத்து, தற்போது இன்று சனிக்கிழமை வரை நீடிக்கப்பட்டுள்ளது.

லுப்தான்சாவின் துணை விமான நிறுவனமான ஆஸ்திரிய ஏர்லைன்ஸ் தெஹ்ரானுக்கு விமானங்கள் இயக்குவதை தொடர்கிறது. வியன்னாவில் இருந்து தெஹ்ரான் குறுகிய நேரம் என்பதாலும் பகல் பொழுதில் விமானங்கள் இயங்கும் எனவும் நிறுவனம் அறிவித்துள்ளது.

இஸ்ரேல், ஈரானிய தூதரகத்தின் மீது தாக்குதல் நடத்தியதும் அதற்கு பதிலடியாக ஈரான் தாக்குதல் நடத்த போவதாக தெரிவித்ததும் மத்திய கிழக்கு பிராந்தியத்தில் போர் பதற்றத்தை உருவாக்கியுள்ளது.




# கிழக்கு ஆசியாவில் அதிகரிக்கும் வெப்பம்

## ஆபத்தில் குழந்தைகள்

நியூயோர்க், ஏப். 13

கிழக்காசிய மற்றும் பசிபிக் நாடுகளில் வாழும் 243 மில்லியனுக்கும் அதிகமான குழந்தைகள் கடுமையான வெப்பத்தால் பாதிக்கப்படக்கூடும் என்று ஐக்கிய நாடுகள் சபை கவலைத் தெரிவித்துள்ளது.

கடுமையான வெப்பத்தால் உடல்நலம் பாதிக்கப்படுவது மட்டுமல்லாமல் மரணம் ஏற்படக்கூடிய அபாயம் இருப்பதாக ஐ.நா. அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

வரும் மாதங்களில் கிழக்காசிய மற்றும் பசிபிக் நாடுகளில் முன்னெப்போதும் இல்லாத அளவு வெப்பநிலை பதிவாகும் என்று முன்னுரைக்கப்பட்டுள்ளது.

வெப்பத்தை தாங்கும் சக்தி குழந்தைகளுக்குக் குறைவு, அதனால் பிள்ளைகள் மூச்சுத்திணறல், ஆஸ்துமா, இதயம் தொடர்பான நோய்களால் பாதிக்கப்படலாம் என்று ஐ.நா. கூறுகிறது.

குழந்தைகளைக் காக்கும் விதமாக முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கவும் வலியுறுத்தியுள்ளது.

இந்நிலையில் தென்கிழக்காசியாவிலும் வெப்பம் கடுமையாக உள்ளது. தாய்லாந்தில் இதுவரை இரண்டு பேர் வெப்பதாக்கத்தால் உயிரிழந்துள்ளனர்.

பிலிப்பீன்சிலும் சில நகரங்களில் பள்ளிகளுக்கு விடுமுறை அளிக்கப்பட்டுள்ளது. குழந்தைகள் வீடுகளில் இருந்தே படிக்கவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

# சர்வதேச மாணவர்களை உள்ளீர்ப்பதில் அதிகளவில் ஆர்வம் காட்டும் பிரான்ஸ்!

பாரிஸ், ஏப். 13

2022/2023 ஆம் கல்வியாண்டில் பிரான்ஸ் உயர்கல்வி நிறுவனங்களில் சுமார் 412,087 சர்வதேச மாணவர்கள் இணைந்துக் கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதன்படி, பிரான்ஸ் உயர்கல்வி நிறுவனங்களில் வெளிநாட்டு மாணவர்கள் இணைத்துக்கொள்ளப்படும் எண்ணிக்கை கடந்த வருடம் 3 வீதம் அதிகரித்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன், இந்த எண்ணிக்கையானது கடந்த ஐந்து ஆண்டுகளில் 17 வீத அதிகரிப்பை காட்டுவதாகவும் சர்வதேச ஊடகங்கள் சுட்டிக்காட்டுகின்றன.

உலகளாவிய ரீதியில் சர்வதேச மாணவர்களை உள்வாங்கும் உயர்கல்வி நிறுவனங்களை



கொண்ட நாடுகளில் பிரான்ஸ் முக்கிய பங்கு வகிக்கின்றது.

இதன்படி, 2021/22 ஆம் கல்வியாண்டு முதல் பிரான்ஸ் உயர்கல்வி நிறுவனங்களில் உள்வாங்கப்படும் வெளிநாட்டு மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது.

வெளிநாட்டு மாணவர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்களை வரவேற்பது தொடர்பான பிரான்ஸ் அரசாங்கத்தின் திறந்த வெளியுறவு கொள்கையின் விளைவாக இந்த அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், 2027 ஆம் ஆண்டுக்குள் 500,000 சர்வதேச மாணவர்களை உள்ளீர்க்கும் திட்டத்தினை பிரான்ஸ் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# போருக்கு தயாராகும் சூழல் வந்துவிட்டது!

பியொங்யாங், ஏப். 13

நாட்டைச் சுற்றியுள்ள நிலையற்ற புவிசார் அரசியல் சூழ்நிலைகள், முன்னெப்போதையும் விட இப்போது அதிகரித்துள்ளதால் போருக்கு தயாராக இருக்க வேண்டிய நேரம் வந்துவிட்டதாக வட கொரியாவின் ஜனாதிபதி கிம் ஜோங் உன் கூறியுள்ளார்.

வடகொரியாவின் இராணுவம் மற்றும் அரசியல் பல்கலைக் கழகத்தை ஆய்வு செய்தபோதே கிம் ஜோங் உன் இந்த கருத்தை தெரிவித்தார்.

“வட கொரியாவுடன் இராணுவ மோதலை எதிரி தேர்வு செய்தால், தங்கள் வசம் உள்ள அனைத்து வழிகள் ஊடாக தயக்கமின்றி எதிரிக்கு மரண அடியை கொடுப்போம்.

முன்னெப்போதையும் விட இப்போது ஒரு போருக்கு முழுமையாக தயாராக இருக்க வேண்டிய நேரம் இது.” என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

வடகொரியா புதிய ஏவுகணையை அண்மையில் சோதனை செய்தது.

"வாசோங்-16 பி ஏவுகணை உலகளவில் எதிரி தரப்பில் உள்ள எந்த இலக்கையும் வேகமாகவும், துல்லியமாகவும், சக்தி வாய்ந்ததாகவும் தாக்கும் திறனை கொண்டது.” ஜனாதிபதி கிம் ஜோங் உன் கூறியிருந்தார்.

இந்த ஏவுகணைக்கு தென் கொரியா, ஜப்பான் மற்றும் அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளன.

இந்த நிலையிலேயே தற்போது போருக்கு தயாராக இருக்க வேண்டுமென்ற கருத்தையும் கிம் ஜோங் உன் கூறியுள்ளார்.

இந்த அறிவிப்பு தொடர்பில் அமெரிக்காவும் அதன் நேச நாடுகளும் அவதானம் செலுத்தியுள்ளன. (அ)

# பொருளாதாரம் தெரியாதவர் ஜனாதிபதியானால் ஆபத்து!

## எச்சரிக்கிறார் திலும் அமுனுகம

**கொழும்பு, ஏப். 13**
**பொருளாதார அபிவிருத்தி வேலைத்திட்டம் தொடர்பில் அறிந்திராத ஒருவர் இந்த நாட்டின் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டால் நாட்டின் நிலை கேள்விக்குறியாகும்" என ராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்துள்ளார்.**



இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

சுதந்திரக்கட்சிக்குள் இன்று பாரிய பிரச்னை எழுந்துள்ளது. கட்சிக்குள் இருந்து எதனையும் செய்யமுடியாது என்பதனாலேயே நாம் முன்கூட்டியே கட்சியில் இருந்து வெளியேறினோம்.

பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் யார் என்பது தொடர்பில் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டு உத்தியோகப்பூர்வ அறிவிப்பை வெளியிடுவோம்.

இன்று ஜனாதிபதித் தேர்தலில் பலர் போட்டியிட விரும்புகின்றனர். ஆனால் பொருளாதார வேலைத்திட்டம் தொடர்பில் அறிந்திராத ஒருவர் இந்த நாட்டின் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டால் நாட்டின் நிலை என்னவாகும் என்பதை அனைவரும் அறிவர்-என்றார். (அ)

# மக்களை அடக்க சட்டங்கள்!

## சட்டத்தரணி மனோஜ் நாணயக்கார

கொழும்பு, ஏப். 13
மக்களை அடக்கும் நோக்கில் சட்டங்கள் பலவற்றை அரசாங்கம் கொண்டுவருவதாக உண்மை மற்றும் நீதிக்கான சட்டத்தரணிகள் சங்கத்தின் ஒருங்கிணைப்பாளர் சட்டத்தரணி மனோஜ் நாணயக்கார குற்றஞ்சாட்டியுள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு குற்றஞ்சாட்டியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதி என்ற வகையில் சட்டங்கங்கள் பலவற்றை புதிதாக கொண்டு வருகின்றார். அதே போன்று சட்டங்களில் திருத்தங்களையும் மேற்கொள்கின்றார். மக்கள் ஆணையற்ற இந்த அரசாங்கம் பெரும்பான்மையை கொண்டு மக்களின் உரிமைகளை மீறும் வகையிலான சட்டங்கள் பலவற்றை கொண்டுவரும் விடயத்தை மேற்கொண்டு வருகின்றனர்.

இது நாட்டு மக்களுக்கு எதிர்காலத்தில் பெரும் நெருக்கடியை தோற்றுவிக்கும். அவர்கள் இவ்வாறு செயற்படுவதற்கு உள்ள உரிமை என்ன? கடந்த காலங்களில் தம்மால் செய்ய முடியாது போன விடயங்களை நிறைவேற்றும் நோக்கிலேயே அவர்கள் இந்த சட்டங்களை நடைமுறைப்படுத்துகின்றனர். மாறாக நாட்டின் அபிவிருத்திக்காகவோ, நாட்டின் நலன் மேம்பாட்டிற்காகவோ அவர்கள் அதனை மேற்கொள்ளவில்லை- என்றார். (அ)

# மேம்படுத்தப்பட்ட உணவு மற்றும் வாழ்வாதார பாதுகாப்பு நிகழ்ச்சித் திட்டம் வவுனியாவில்!

வவுனியா, ஏப். 13
மேம்படுத்தப்பட்ட உணவு மற்றும் வாழ்வாதாரப் பாதுகாப்புக்காக, சிறு விவசாயிகள் மற்றும் வீடு சார்ந்த விவசாயத் தொழில்களை வலுப்படுத்துதல் நிகழ்ச்சித் திட்டம் வவுனியாவில் நிறைவு பெற்றது.

இந்த நிகழ்ச்சி திட்டம், ஆயிரத்து 500 பெண்களின் பங்களிப்புடன் வவுனியாவில் வெற்றிகரமாக நடைமுறைப்படுத் தப்பட்டுள்ளது.

2023 இல், பல்ம் அமைப்புடன் இணைந்து ஜப்பானிய துணை பட்ஜெட் உதவியின் கீழ், குடும்ப ஊட்டச்சத்து மற்றும் உணவுப் பாதுகாப்பை மேம்படுத்தும் வகையில், "மேம்படுத்தப்பட்ட உணவு மற்றும் வாழ்வாதாரப் பாதுகாப்புக்காக, சிறு விவசாயிகள் மற்றும் வீடு சார்ந்த விவசாயத் தொழில்களை வலுப்படுத்துதல் என்ற திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது.

இந்த திட்டத்தின் மூலம், வவுனியா, வவுனியா தெற்கு மற்றும் வெங்கலச் செட்டிக்குளம் ஆகிய 3 பிரதேச செயலக பிரிவுகளில் உள்ள, 52 கிராம அலுவலர் பிரிவுகளில் வசிக்கும், ஆயிரத்து 500 பெண்கள் பயனடைந்தனர்.

இந்த திட்டத்தினால் 30 ஆயிரம் கோழிக் குஞ்சுகள் வழங்கப்பட்டன.

தற்போது வவுனியா மாவட்டத்தில், மாதாந்தம் 2 இலட்சத்து 88 ஆயிரம் முட்டை உற்பத்தியை காண முடிகிறது.

இதுவரை இருபது விவசாயிகள் மற்றும் இருபது பொருத்தமான நிலங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, இருபது ஏக்கர் பரப்பளவில், தொடர்ந்து கோழித் தீன்களை வழங்குவதற்காக, சோளம் பயிரிடப்பட்டுள்ளது.

யு.என்.டி.பி அதற்கான விதைகள் மற்றும் நீர்ப்பாசன முறைகளை வழங்கியது.

இருபது விவசாயிகளுக்கும், சோளப் பயிர்ச் செய்கை செய்வதற்காக 150 கிலோ சோள விதைகள் விநியோகிக்கப்பட்டன.

இருபது விவசாயிகளும் சோளம் பயிரிட்டு 12 ஆயிரத்து 500 கிலோ சோளத்தை தங்கள் பயிர்ச் செய்கை மூலம் பெற்றனர்.

இதன் மூலம், பெண்களுக்கான தொழில் வாய்ப்பு ஏற்பட்டுள்ளதுடன், பொருளாதார மீட்சியும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இதன் நிறைவு விழா, வவுனியா மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இதில், வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் பீ.ஏ.சரத்சந்திர, வவுனியா பிரதேச செயலாளர் நா.கமலதாசன், வவுனியா தெற்கு பிரதேச செயலாளர் கே.குமார, பல்ம் நிறுவன செயல்திட்ட முகாமையாளர் சுனில் தொம்பேபொல, திட்ட முகாமையாளர் தமித் சந்திரசேகர, கள ஒருங்கிணைப்பாளர் கீர்த்திகா விஜயசுந்தர, யு.என்.டி.பி நிறுவன உறுப்பினர்கள் மற்றும் திட்டத்தில் அரசாங்க, நிறுவன உத்தியோகத்தர்களுடன் இணைந்து பணியாற்றிய பயனாளிகள் பங்கேற்றனர். (அ)



# புத்தாண்டு வியாபாரம் யாழ்ப்பாணத்தில் மந்தம்

யாழ்ப்பாணம், ஏப். 13
யாழ்ப்பாணத்தில் இம்முறை புத்தாண்டு வியாபாரங்கள் பெரியளவில் களைகட்டவில்லை என வியாபாரிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

பொருளாதார நெருக்கடிகள் காரணமாக புத்தாடைகளை கொள்வனவு செய்வதற்கு மக்கள் ஆர்வமின்றி காணப்படுத்தாகவும், யாழ்ப்பாணத்தில் நிலவும் கடுமையான வெப்பமான கால நிலையால் மக்கள் வீதிகளுக்கு வருவது குறைவடைந்துள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

ஆயினும் இன்று வியாபாரம் களைகட்டும் என தாம் எதிர்பார்த்துக் காத்திருப்பதாகவும் வியாபாரிகள் கூறினர். (அ)

# ஸ்மார்ட் மீன்பிடி குறித்தும் நாங்கள் சிந்திக்கவேண்டும்

## எதிர்க்கட்சித் தலைவர் கோரிக்கை

கொழும்பு, ஏப். 13
ஸ்மார்ட் கல்வி போலவே ஸ்மார்ட் மீன்பிடித்துறை குறித்தும் நாம் சிந்திக்க வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

பிரபஞ்சம் தகவல் தொழிநுட்ப வேலைத்திட்டத்தின் கீழ், 152 ஆவது கட்டமாக 10 இலட்சம் ரூபா பெறுமதியான ஸ்மார்ட் வகுப்பறை உபகரணங்கள், புத்தளம்,சிலாபம், புனித செபஸ்ரியன் நவோதய கல்லூரிக்கு வழங்கி வைக்கும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஸ்மார்ட் கல்வியும், ஸ்மார்ட் விவசாயமும் இருப்பதைப் போல மீன்பிடித் தொழிலும் ஸ்மார்ட்டாக மாற வேண்டிய தேவையுள்ளது. பாரம்பரிய முறைக்கு அப்பாற்பட்ட உயர் தொழில்நுட்ப முறைகளை இங்கு பயன்படுத்தலாம்.

ஐக்கிய நாடுகள் சபையின் கடல் சட்ட சாசன மாநாட்டில், சர்வதேச கடல் சட்டத்தின் மூலம் எமது கடற்கரையிலிருந்து 200 கடல் மைல் தொலைவிக்குட்பட்ட ஒரு தீவு நாடு எமக்கு சொந்தமாக இருந்தாலும், இந்த கடல் வளத்தை நாம் உரிய முறையில் பயன்படுத்திக் கொள்வதாக இல்லை இலங்கையில் வேறு யாராலும் நம்பர் 1 ஆக முடியாது என்ற போதிலும், ஐக்கிய மக்கள் சக்தியால் இலங்கையில் நம்பர் 1 ஆக இருக்க முடியும். காரணம் இலங்கை வரலாற்றில் ஒரு கட்சி இவ்வாறான பணியை முன்னெடுப்பது இதுவே முதல் தடவையாகும். கட்சி அரசியலுக்கு ஐக்கிய மக்கள் சக்தி முன்னுதாரணமாக திகழ்வதால் இதற்கு ஆதரவளிக்கும் பெருமளவிலான மக்கள் நாட்டில் இருக்கிறார்கள்-என்றார். (அ)

# முட்டை விலை மீண்டும் உயர்வு

கொழும்பு, ஏப். 13
சில நாட்களாக சற்று குறைந்திருந்த உள்ளூர் முட்டை விலை தற்போது மீண்டும் உயர்ந்துள்ளது என அகில இலங்கை முட்டை உற்பத்தியாளர்கள் சங்கத்தின் பொருளாளர் விஜய் அல்விஸ் தெரிவித்துள்ளார்.

தற்போது உள்ளூர் முட்டையின் மொத்த விலை 50 ரூபாயாகவும், சில்லறை விற்பனையில் 55 ரூபாயாகவும் உள்ளது. இடைத்தரகர்களே விலையை உயர்த்துவதாக அவர் தெரிவித்தார்.

இதேவேளை, முட்டையின் விலை உயர்த்தப்பட்டால் மீண்டும் இந்தியாவில் இருந்து முட்டையை இறக்குமதி செய்யவுள்ளதாக வர்த்தக அமைச்சர் நளீன் பெர்னாண்டோ கூறினார்.

பண்டிகைக் காலத்தில் முட்டைகளின் தேவை அதிகரித்துள்ளதால் முட்டையின் விலையில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாக சந்தை தரவுகள் குறிப்பிடுகின்றன. (அ)

# புத்தாண்டுக்கு குறிப்பிட்ட நேரத்தில் திறந்திருக்கும் மதுபானசாலைகள்!

கொழும்பு, ஏப். 13
நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்து மதுபானச்சாலைகளை இன்றும் நாளையும் மூடுவதற்கு கலால் திணைக்களம் தீர்மானித்தது.

தமிழ்-சிங்களப் புத்தாண்டு காரணமாக இந்த தீர்மானம் எடுக்கப்பட்டது.

இருப்பினும், சமீபத்திய திருத்தத்தின்படி, அனைத்து மதுபானக் கடைகளும் இன்றும் நாளையும் காலை 8.00 மணி முதல் 10.00 மணி வரை திறந்திருக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## பொது...

ஒருவரை நிறுத்துவதற்கான முயற்சி கள் தொடர்பில் கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் அரசியல் கட்சிகளின் சார்பில் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்துவ தற்கான முன்முயற்சிகள் முன்னெடுக்கப் படுகின்றன.

தற்போதைய நிலையில், ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்குவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றவர்கள் தமிழ் மக்களின் இனப்பிரச்னைக்கான தீர்வு உட்பட எந்தவொரு விடயங்களிலும் கரிசனைகளைக் கொண்டவர்களாக தம்மை வெளிப்படுத்தவில்லை.

ஆகவே, எந்த அடிப்படைகளுமின்றி தென்னிலங்கை வேட்பாளர்களை ஆதரிப்பது பொருத்தமற்றதொரு முயற்சியாகும். அந்த வகையில் தமிழ்க் கட்சிகள் அனைத்தும் ஒன்றிணைந்து பொது வேட்பாளரை நிறுத்துகின்றமை பொருத்தமான அணுகுமுறையாகும்.

அந்த முயற்சிக்கு நான் கொள்கை அளவில் இணக்கம் தெரிவிக்கின்றேன். எனினும், இலங்கைத் தமிழரசுக் கட்சியினுள் இந்த விடயம் சார்ந்து கலந்துரையாடி கட்சியாக தீர்மானம் எடுக்கவேண்டியது மிகவும் முக்கிய மானதாகின்றது.

ஆகவே, குறித்த விடயம் சம்பந்தமாக கட்சியாக கூடி ஆராய்ந்து தீர்மானிக் கப்பட வேண்டியது அவசியமாகின்றது- என்றார். (அ)

## யாழ்.இளைஞர்...

சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

இலங்கையிலிருந்து சட்டவிரோத மாக இந்தியாவுக்குள் ஊடுருவினார்கள் என்ற குற்றச்சாட்டில் யாழ். குருநகரைச் சேர்ந்த 27 வயது, மற்றும் 34 வயதுடைய இருவர் மீதும் திருவாடானை நீதிமன்றத் தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு விசாரணை நடைபெற்று வந்தது.

இந்நிலையில், நேற்று முன்தினம் வழங்கப்பட்ட தீர்ப்பில் இருவருக்கும் 7 மாதங்கள் சிறைத் தண்டனை விதிக்கப் பட்டது. (எ)

## இன்று...

இரவு 9.04 மணியளவில் குரோதி வருடம் ஆரம்பமாகின்றது.

**விஷு புண்ணிய காலம்**

இன்று சனிக்கிழமை மாலை 5.04 மணி முதல் நள்ளிரவு 1.04 மணி வரை

**சங்கிரம தோஷ நட்சத்திரங்கள்**

மிருகசீரிடம், திருவாதிரை, புனர் பூசம் 1,2,3 பாதங்கள், சித்திரை, விசாகம் 4ஆம் பாதம், அனுஷம், கேட்டை, அவிட் டம் ஆகிய நட்சத்திரங்களை கொண்டோர் தவறாமல் மருத்துநீர் வைத்து நீராடி, தான, தர்மம் செய்து, சங்கிரம தோஷ நிவர்த்தி செய்துகொள்ள வேண்டும்.

**குரோதி வருட பலன்கள்**

இவ்வருடம் முன்மழை அதிகமாகும். பின்மழை மத்திமமாகும். உணவுப் பொருள் விருத்திகள், கமத்தொழில், கைத்தொழில் போன்றவற்றில் இலா பங்கள் அமையும்.

அரச சேவை திருப்திகரமானதாக அமையும். கல்வி மேன்மைகள் சிறப் படையும். பொருட்களின் விலை அதிகமாக அமையும். அரசியலில் திடீர் மாற்றங்கள் ஏற்படும்.

**கைவிஷேட நேரங்கள்**

14.04.2024 சித்திரை - ஞாயிற்றுக் கிழமை

காலை 07.57 மணி முதல் 09.56 மணி வரை.

காலை 09.59 மணி முதல் நண்பகல் 12.01 மணி வரை.

மாலை 06.17 மணி முதல் இரவு 08.17 மணி வரை.

**புது வியாபாரம் ஆரம்பிக்கும் நேரங்கள்**

15.04.2024 திங்கட்கிழமை

காலை 09.08 மணி முதல் 09.51 மணி வரை.

காலை 09.55 மணி முதல் 10.30 மணி வரை.

## இலங்கை...

பாரதிய ஜனதா கட்சி முன்னிறுத்து கிறது. இலங்கையுடனான நம் உறவில் ஏற்படப்போகும் தாக்கங்களை சிறிதும் சிந்திக்காமல் இந்த விவகாரத்தை எழுப்பி உள்ளனர் - என்று அவர் சாடினார்.

யஷ்வந்த் சின்ஹா, பிரதமர் சந்திர சேகர் தலைமையிலான அமைச்சர வையில் 1990 - 1991 வரை நிதி அமைச்சராகவும் பிரதமர் வாஜ்பாயின் அமைச்சரவையில் 1998 - 2002 வரை வெளிவிவகார அமைச்சராகவும் பதவி யில் இருந்தவர் என்பது குறிப்பிடத்தக் கது. (ஐ)

## இனவாதத்தை...

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் பொது வேட்பாளர் ஒருவரை களமிறக்குவதற் கான முஸ்தீபுகளை எடுத்துள்ள நிலை யில் அது தொடர்பில் கருத்து வெளி யிடுகையிலேயே அவர் மேற் கண்ட வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்கள் கடந்த காலங்களில் பல்வேறு உபாயங்களை முன்னெடுத்துள்ளனர். இருப்பினும் அந்த உபாயங்களால் தமிழ் மக்களுக்கு போதுமான அளவில் பிரதிபலன்கள் கிடைத்திருக்கவில்லை.

அவ்வாறான பின்னணியில் தற் போது தமிழ் அரசியல் தரப்புக்கள் அடுத்து நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் தமது தரப்பில் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்துவதற்கு முயற்சிக்கின்றார்கள்.

அனைத்துக் கட்சிகளும் இந்த விட யத்தில் ஒருமித்து நின்று செயற்படு வதற்கு முன்வருகின்ற பட்சத்தில் சாத்திய மானதொரு வியூகமாகும்.

ஆனால், கள யதார்த்தத்தின் அடிப் படையில் தமிழ் தரப்பில் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்தும் விட யத்தில் அனைத்து தமிழ்க் கட்சிக ளுக்கும் இடையில் ஏகமனதான நிலைமைகள் வரப்போவதில்லை.

இதன் காரணமாக, தமிழ்க் கட்சி களுக்கு இடையில் காணப்படு கின்ற உறவுகள் தற்போதைய நிலைமையை விடவும் மோசமான தாகவே அமை யப்போகின்றன.

அவ்விதமான நிலைமையில், நிறுத் தப்படும் தமிழ் வேட்பாளரால் அதியுச்ச கோரிக்கையான சுயாட்சி உள்ளிட்ட வற்றை முன்வைப்பது மிகக் கடினமான தாகவே அமையும்.

1976ஆம் ஆண்டு வட்டுக் கோட்டை தீர்மானம் மேற்கொள்ளப்பட்டு 1977இல் தேர்தலுக்கு முகங் கொடுத்த நிலைமை கள் தற்போது இல்லை. தமிழர்களின் அரசியல் போக்கு அவரோ கணத்தி லேயே உள்ளது. அவ்விதமான தொரு சூழலில் பொது வேட்பாளர் முடிவானது பொருத்தமான நகர்வாக அமையாது- என்றார். (அ)

## இரு சர்வதேச...

இந்த நிலையில் நேற்று அந்தப் பகுதிக்கு அமைச்சர் டக்ளஸ் தேவா னந்தா மற்றும் துறைசார் அதிகாரிகள் நேரில் சென்று நிலைமைகளை ஆராய்ந் தனர்.

இந்த விடயம் தொடர்பாக, யாழ். மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக் கூட் டத்தில் முன்மொழியப்பட்டபோது விவசாய நிலங்கள் மற்றும் மழை நீர் வழிந்தோடும் வழிகள் இருப்பதால் அப் பகுதியில் மைதானங்களை அமைப்பதி லுள்ள சாதக, பாதகங்கள் குறித்து ஆராயப்பட வேண்டும் என வலியுறுத் தப்பட்டது.

இப்பகுதியில் விவசாயம் மற்றும் நீர் வழிந்தோடும் பொறிமுறையை உள்ள டக்கியதான தீர்வுகள் தொடர்பில் ஆராய்ந்து காணொலி வடிவிலான திட்ட வரைவை தமக்கு தருமாறு அமைச்சர் அதிகாரிகளுக்கு பணித்துள்ளார் என் றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ - எ)

## ரஷ்ய...

உக்ரைனின் ஆக்கிரமிப்புப் பகுதியில் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபடவி ருந்த ரஷ்யப் படைகளை இலக்கு வைத்து உக்ரைன் இராணுவம் நடத்திய தாக்குதலில் இந்த இரண்டு இலங்கை யர்களும் கொல்லப்பட்டுள்ளனர்.

இந்த தாக்குதலில் ரஷ்ய இராணு வத்தைச் சேர்ந்த பலர் கொல்லப்பட் டனர் என அந்த நாட்டிலிருந்து கிடைத்த தகவல்கள் தெரிவிக்கின்றன.

எவ்வாறாயினும், உயிரிழந்த இலங் கையர்கள் இருவரும் சுற்றுலா விசாவில் ரஷ்யா சென்று அந்நாட்டு இராணுவத் தில் இணைந்துகொண்ட ஓய்வு பெற்ற இராணுவத்தினர் என கூறப்படுகிறது. ரஷ்ய இராணுவத்தில் துணைச் சேவை வேலைகள் என்று கூறி ஓய்வு பெற்ற இராணுவத்தினரை ரஷ்யாவுக்கு அழைத்துச் சென்று பணியில் அமர்த் தும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப் பட்டுள்ளன.

மனித கடத்தல் குழுவொன்றினால் இந்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப் பட்டுள்ளதாக குற்றம் சுமத்தப்படு கின்றது. கடந்த காலங்களிலும், கூலிப் படையாக செயற்பட்ட பலர் இந்த போரில் கொல்லப்பட்டுள்ளமை குறிப் பிடத்தக்கது. (அ)

## கோவிட்...

பி. சி. ஆர். சோதனையில் கோவிட் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

இதைத் தொடர்ந்து, உயிரிழந்த நோயாளி சிகிச்சை பெற்ற நோயாளர் விடுதியின் நோயாளிகள் மற்றும் ஊழி யர்களை தனிமைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப் பட்டது.

இதேசமயம், நாட்டில் கொரோனா தொற்றால் உயிரிழந்த 16 ஆயிரத்து 898ஆக உயர்ந்துள்ளது என்பது குறிப் பிடத்தக்கது. (ஐ)

## விவாதங்களை...

வளங்களை நாட்டுத் தலைவரின் சாமர்த்தியத்துடன் நமது நாட்டுக்கு கொண்டுவர வேண்டும். விவாதங்களும், தர்க்கங்களும், கலந்துரையாடல்களும் நடக்க வேண்டும். முன்மொழிவுகள், மற்றும் வேலைத்திட்டங்களை முன் வைக்காமல் அவ்வாறான வளங்களைப் பெற முடியாது எனவும் குறிப்பிட்டார்.

சர்வதேச தலைவர்கள் இடையே தனிப்பட்ட சந்திப்புகள்கூட நடக்கின் றன. மொழித்திறன் இல்லை என்றால் இங்கு ஒன்றும் செய்ய முடியாது. இவ்வாறான திறமை இல்லாதவர்களுக்கு நாட்டின் தலைமைத்துவத்தை வழங்கு வது மீண்டும் பாதாளத்தில் விழுவதைப் போன்றதாகும் எனவும் தெரிவித்தார்.

பிரபஞ்சம் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் மொனராகலை தனமல்வில, கெத்சிரிகம கனிஷ்ட வித்தியாலயத்துக்கு நவீன வகுப்பறை உபகரணங்களை வழங்கும் நிகழ்விலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதேவேளை, நாட்டுக்கு உண் மையை வெளிப்படுத்தக்கூடிய தூ ரநோக்கு பயணம் கொண்டவர் யார்? அந்தப் பயணத்தை ஒரு வேலைத்திட்ட மாக மாற்றி இந்நாட்டில் நடைமுறைப் படுத்த முடியுமானவர் யார்? என்பது குறித்து விவாதம் நடத்த நான் எந்நேரத் திலும் தயாராக இருக்கின்றேன். இவ்வா றான விவாதங்களிலிருந்து தப்பியோட வேண்டாம்.

பொருளாதார நெருக்கடி தொடர் பில் எனது பொருளாதார கொள்கை வகுப்பாக்கக் குழுவினரோடு மாற்று அணியின் பொருளாதாரக் குழுக்களை யும் ஒன்றிணைத்து விவாதம் நடத்து வோம் என நாகரிகமாக அழைக்கும் போது, கோழைகள் போன்று விவா தங்களிலிருந்து தப்பியோட வேண்டாம் என புரட்சித் தலைவர்களிடம் கோரிக்கை விடுப்பதாக சஜித் மேலும் குறிப்பிட் டார். (எ)

## தமிழரின்...

ஊடக அறிக்கையில் தெரிவித்தவை வருமாறு,

காலங்காலமாக நாங்கள் ஜனாதிபதித் தேர்தல்களில் யாரேனும் ஒரு பெரும் பான்மைக்கட்சியின் வேட்பாளரையே ஆதரித்து வந்துள்ளோம். ஆனால், அது எத்தகைய மோசமான முடிவென்பதை வரலாறு பட்டுணரச் செய்தபின்னும் கூட, இன்னும் அதிலிருந்து பாடம் கற்கத் தயாராற்றவர்களாகவே நாம் உள்ளோம். எமது இனத்தை அழித்த இறுதிப்போரை முன்னின்றி நடத்திய சரத் பொன்சேகாவையும், அந்த இறு திப்போரின் கடைசி நாள்களில் பாது காப்பு அமைச்சராக பொறுப்பு வகித்த மைத்திரிபால சிறிசேனவையும் கடந்த தேர்தலில் சஜித் பிரேமதாஸவையும் ஆதரித்து கடைசியில் என்ன கண் டோம்? அவர்கள் எங்கள் வாக்குகளைப் பெற்றுவிட்டு, சராசரி பேரினவாத போக்குடனேயே தமிழர் பிரச்னைகளை அணுகினரே தவிர எமது வாக்குகளும் அவர்களின் வெற்றிக்கு காரணம் என்ற நன்றி சிறிதும் காட்டவில்லை. இப்படி பேரினவாத கட்சி களமிறக்கும் வேட்பா ளர்களுக்கு நம்பி வாக்களித்து ஏமாறு வதை இனியும் தொடர்வது இனத்தின் இருப்புக்கு ஆரோக்கியமல்ல.

அப்படியானால், தமிழ் பொதுவேட் பாளர் ஒருவரை முன்னிறுத்துவது ஆரோக்கியமானதா? என்ற கேள்வி எழ லாம். தமிழ் கட்சிகளால் ஒரு பொது வேட்பாளர் ஜனாதிபதித் தேர்தலில் நிறுத்தப்பட்டால் ஒட்டுமொத்த தமிழ் மக்களின் வாக்குகளும் சிந்தாமல் சிதறா மல் கிடைத்தாலும் கூட அந்த வேட்பா ளரால் வெற்றிபெற முடியாதென்பது வெளிப்படையானதே. ஆனாலும் அந் தத் தோல்வியிலும் நாம் சில வெற்றி களை அடையமுடியும். தமிழர்கள் சிங்கள ஆட்சியாளர்கள் மீது நம்பிக்கை யிழந்து விட்டார்கள் என்பதையும் தமிழ் மக்களின் அபிலாசை இலங்கையின் பெரும்பான்மைப் போக்குக்கு மாறா னது எனவும், உரிமைக்கான எமது ஒன்றுபட்ட வேட்கையையும் பொது வேட்பாளருக்கு திரளாக வாக்களிப்பதன் மூலம் நாம் உணர்த்தமுடியும். அப்படி அவர்கள் உணராவிட்டாலும் அது குறித்து நாம் கவலையடையத் தேவை யில்லை. ஏனெனில், பேரினவாதக் கட்சிகளின் வேட்பாளருக்கு வாக்களித் தாலும் ஏதும் அதிசயம் நிகழ்ந்து விடப்போவதில்லையே?

ஆனால், இந்த யதார்த்தத்தைப் புரிந்துகொள்ளாமல் பேரினவாத கட்சி களின் வேட்பாளரை ஆதரிக்கும் கருத்து நிலையை தமிழ்மக்களிடம் சிலர் விதைக்க முனைகின்றனர். தமிழ்ப் பொதுவேட்பாளர் என்ற கருதுகோள் முளையில் இருக்கும்போதே, அது ராஜபக்ஷக்களின் சதி என்று பதறுகின்ற னர். தங்களின் திட்டங்கள் பாழாகிவிட் டமையும் கிடைக்கவேண்டிய வரப்பிர சாதங்கள் இல்லாமல் போய்விடுமோ என்ற ஆதங்கமுமே இந்தப் பதற்றத்துக்கு மிகமுக்கியமான காரணங்கள். ஆனால், உண்மையில் தமிழ்ப் பொதுவேட்பாளர் என்ற எண்ணக்கருவை எதிர்ப்பவர்கள் பேரினவாத ஆட்சியாளர்கள் வெல்வ தற்கே துணைசெய்கிறார்கள் என்பதே உண்மை, மீண்டுமொருமுறை மக்க ளைப் படுகுழிக்குள் தள்ளிவிடவே இவர்கள் எத்தனிக்கின்றனர். எனவே இந்தத் திசைமாற்றல்களுக்கு எடுபடா மல், பொதுவேட்பாளர் என்ற எண்ணக் கருவோடு ஒன்றித்து, எமது உரிமைக் குரலை உலகறியச் செய்வதே காலப் பொருத்தம். இது என்னுடைய தனிப் பட்ட கருத்து மாத்திரமே. தமிழ்ப் பொதுவேட்பாளர் குறித்து கட்சியே இறுதி முடிவெடு க்கும், அந்த முடிவு கடந்த காலங்களைப் போல மீண்டும் இருண்ட யுகத்துக்குள் எமதினத்தை மூழ்கடிக்காமல், ஒளிமயமானதாக, தீர்க்கமானதாக அமைய வேண்டும் - என்றுள்ளது. (ஐ)

ஈழநாடு
Eelanadu ஈழநாடு

# உயர்தர பெறுபேறு மே மாதத்தில்!

கொழும்பு, ஏப். 13

உயர்தரப் பரீட்சை பெறுபேறுகள் அடுத்த மாதத்துக்குள் வெளியிடப்படும் என பரீட்சை திணைக்களம் தெரிவித்துள்ளது.

பெறுபேறுகள் தொடர்பான ஆவணங்களை மீள் சரிபார்த்தல் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக திணைக்களம் தெரிவித்துள்ளது.

அத்துடன் விசேட தேவையுடைய பரீட்சார்த்திகளின் விடைத்தாள்களை மதிப்பீடு செய்யும் பணிகளும் தொடரும் என பரீட்சை திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்நிலையில் உயர்தரப் பரீட்சை கடந்த ஜனவரி மாதம் 4ஆம் திகதி முதல் 30ஆம் திகதி வரை இடம்பெற்றதுடன், 342,883 பரீட்சார்த்திகளின் பரீட்சைக்குத் தோற்றியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

# தமிழ் வேட்பாளர் தேவையில்லை!

## செந்தில் தொண்டமான் கருத்து

கொழும்பு, ஏப். 13

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்களுக்கு தனி வேட்பாளர் தேவையில்லை என இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் செந்தில் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இதேவேளை, இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் ஜனாதிபதித் தேர்தலில் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிக்கும் எனவும் அவர் சுட்டிக்காட்டினார். (அ)

# கிளிநொச்சி விபத்தில் ஒருவர் காயம்!

கிளிநொச்சி, ஏப். 13

கிளிநொச்சி பரந்தன் வீதியில் நேற்றுக் காலை இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் காயமடைந்தார்.

பாரவூர்தி ஒன்று துவிச்சக்கரவண்டி ஒன்றுடன் மோதியதில் குறித்த விபத்து ஏற்பட்டது.

துவிச்சக்கரவண்டியில் பயணித்த ஒருவரே விபத்தில் காயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

காயமடைந்தவர் கிளிநொச்சி மாவட்ட பொதுவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

அத்துடன் விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (அ)

# பருத்தித்துறை நகர சபையின் வாசிப்பு மாத பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், ஏப். 13

பருத்தித்துறை நகர சபையின் உள்ளூராட்சி வார வாசிப்பு மாத பரிசளிப்பு விழா நேற்று முன் தினம் நகர சபை செயலாளர் தாரணி கஜரூபன் தலைமையில் இடம்பெற்றது.

விருந்தினர்கள், மலர் மாலை அணிவிக்கப்பட்டு, வீதியில் இருந்து விழா மண்டபம் வரை அழைத்துச் செல்லப்பட்டு மங்கல விளக்கேற்றல் இடம்பெற்றது.

விருந்தினர்களாக பருத்தித்துறை பிரதேச செயலாளர் சி.சத்தியசீலன், வடமராட்சி கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் மோ.தெய்வேந்திரா, முன்னாள் நகர பிதாக்களான இருதயராசா மற்றும் வே.நவரட்ணராசா ஆகியோர் பங்கேற்றனர்.

வரவேற்பு நடனம், வரவேற்பு உரை, தலைமை உரை என்பன இடம்பெற்றதை தொடர்ந்து, வடமராட்சியின் புகழ் பூத்த, 8 கராத்தே பட்டி பெற்ற ஆசிரியரும், யோகாசன ஆசிரியருமான ரட்ணசோதி மற்றும் கலைஞர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

அத்துடன், ஒழுங்காக நகர சபைக்கு வரி செலுத்துவோர், பருத்தித்துறை நகர சபையால் நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்கள், விருந்தினர்களால் கௌரவிக்கப்பட்டனர்.

இந்த நிகழ்வில், பருத்தித்துறை நகர சபை உத்தியோகத்தர்கள், நகர சபை முன்னாள் சபை உறுப்பினர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், சனசமூக நிலைய உறுப்பினர்கள் என பலர் பங்கேற்றனர். (அ)

# சுதந்திரக் கட்சியை அரசு பக்கம் இணைக்கும் முயற்சி பலிக்காது!

## கூறுகிறார் தயாசிறி ஜயசேகர



கொழும்பு, ஏப். 13

சுதந்திர கட்சியின் தலைவர் பதவியில் நீடிப்பதற்கு முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு இடைக்காலத் தடை மாத்திரமே விதிக்கப்பட்டுள்ளது. அதனை அடிப்படையாகக் கொண்டு அரசாங்கத்துடன் சுதந்திரக் கட்சியை இணைப்பதற்கு சிலர் முயற்சிக்கின்றனர். ஆனால் அந்த முயற்சி வெற்றியளிக்க இடமளிக்கப்படமாட்டாது என சு.க.வின் முன்னாள் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

சுதந்திர கட்சிக்குள் ஏற்பட்டுள்ள சிக்கல் நிலைமைகள் தொடர்பில் வினவியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

எதிர்வரும் 18ஆம் திகதி வரை மாத்திரமே முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு இடைக்காலத் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

ஆனால் தற்போது அரசாங்கத்துடன் இணைந்து கொண்டுள்ளவர்கள் அதனை நிரந்தர தடை உத்தரவு என எண்ணிக் கொண்டு செயற்படுகின்றனர்.

அமைச்சுப் பதவியில் உள்ள மோகத்தினால், தமது பதவிகளைத் தக்க வைத்துக் கொள்வதற்காக அவர்கள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை வெற்றி பெறச் செய்வதற்கு முயற்சிக்கின்றனர். அதன் காரணமாகவே தற்போது கட்சி யாப்பை மாற்ற வேண்டும் என்றும் கூறுகின்றனர்.

அதுமாத்திரமின்றி யாப்பிற்கு முரணாக அரசியல் குழு கூட்டத்தையும் கூட்டி பதில் தலைவரையும் தெரிவு செய்துள்ளனர்.

இந்த நடவடிக்கைக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று பதில் செயலாளர் அறிவித்திருக்கின்றார். எனவே சட்ட ரீதியாக நாம் அவர்களின் செயற்பாடுகளுக்கு முற்றுப்புள்ளி வைப்போம் - என்றார். (அ)

# மும்பையில் இருந்து கொழும்புக்கு நேற்று முதல் நேரடி விமான சேவை

கொழும்பு, ஏப். 13

இந்தியாவின் மும்பையில் இருந்து கொழும்புக்கான நேரடி விமான சேவைகளை, இண்டிகோ விமானச் சேவைகள் நிறுவனம் நேற்று முதல் ஆரம்பித்துள்ளது.

இதற்கமைய, இண்டிகோவின் முதலாவது விமானம் நேற்று முற்பகல் நாட்டை வந்தடைந்தது.

மும்பையில் இருந்து கொழும்புக்கும், கொழும்பில் இருந்து மும்பைக்கும் செவ்வாய், வியாழன் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் குறித்த விமான சேவைகள் இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# பெரமுன ஆதரவு வேட்பாளருக்கும் சஜித்துக்கும் இடையிலேயே போட்டி

## கூறுகின்றார் எஸ்.பி.திஸாநாயக்க

கொழும்பு, ஏப். 13

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் பொதுஜனபெரமுனவின் ஆதரவுடன் களமிறங்கும் வேட்பாளருக்கும், ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும், எதிர்க்கட்சித்தலைவருமான சஜித் பிரேமதாசவுக்கும் இடையில் தான் பிரான போட்டி காணப்படும் என்று பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.பி.திஸாநாயக்க தெரிவித்தார்.

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தல் தொடர்பாக கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்காக பலரும் வரிசையில் நிற்கின்றார்கள். வெவ்வேறு கதைகளைக் கூறிக் கொண்டிருக்கின்றார்கள்.

அவையெல்லாம் தேர்தலில் மக்களை திசை திருப்பி வெற்றிகளை தம்வசப்படுத்துவதற்கே. ஆனால் கள யதார்த்த நிலைமையானது முற்றிலும் மாறுபட்டதாகவே உள்ளது.

பொதுஜன பெரமுனவின் ஆதரவுடன் வேட்பாளர் ஒரு நிறுத்தப்படுவார் அல்லது பொது ஜன பெரமுனவில் இருந்து வேட்பாளர் ஒருவர் நிறுத்தப்படுவார்.

அவ்வாறு நிறுத்தப்படுகின்ற வேட்பாளர் மட்டுமே வெற்றி பெறுவதற்கான வாய்ப்புக்கள் உள்ளன.

அந்த வகையில் குறித்த வேட்பாளருக்கும், ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாசவுக்கும் இடையில் தான் பிரதான போட்டி நடைபெறவுள்ளது என்பதே எனது கணிப்பாகும்.

எனவே, ஏனையவர்கள் தேர்தலின் பின்னர் அடையாளமில் லாது போய்விடுவார்கள். அவர்களால் அதற்குப் பின்னர் நடைபெறவுள்ள பாராளுமன்றத் தேர்தலில் ஒரு ஆசனத்தினைக் கூட பெறமுடியாத நிலைமையே உரு வாகும் - என்றார். (அ)

# இந்தியாவில் இருந்து மீண்டும் முட்டைகள் இறக்குமதியாகும்

கொழும்பு, ஏப். 13

உள்நாட்டில் மீண்டும் முட்டை விலை அதிகரிக்கும் பட்சத்தில், அரசாங்கம் இந்தியாவிலிருந்து மீண்டும் முட்டைகளை இறக்குமதி செய்யும் என வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

கடந்த சில நாட்களாக உள்நாட்டில் முட்டை விலை குறைவடைந்து காணப்பட்டது.

எனினும், தற்போது 50 ரூபாவுக்கு முட்டை விலையை உயர்த்தி வர்த்தகர்கள் விற்பனை செய்து வருவதாக அவர் தெரிவித்தார்.

இவ்வாறு முட்டை விலை அதிகரிக்கும் பட்சத்தில் மீண்டும் இந்தியாவிலிருந்து அதிகளவான முட்டைகளை அரசாங்கம் இறக்குமதி செய்யும் என வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ குறிப்பிட்டார். (அ)

# போதைப்பொருட்களுக்கு அடிமையானோர் எண்ணிக்கை நாட்டில் வெகுவாக அதிகரிப்பு!

கொழும்பு, ஏப். 13

நாட்டின் இரண்டு மில்லியன் மக்கள் தொகையில் 50,000,000 பேர் பல்வேறு போதைப்பொருட்களுக்கு அடிமையாகியுள்ளதுடன் மற்றும் ஒவ்வொரு ஆண்டும் சர்வதேச அளவில் சுமார் 40,000 பேர் போதைப்பொருள் பாவனையால் உயிரிழக்கின்றனர் என தேசிய போதைப்பொருள் கட்டுப்பாட்டு சபை தெரிவித்துள்ளது.

இவர்களில் பெரும்பான்மையானோர் கஞ்சா பாவனையை நாடியுள்ளதாகவும் கஞ்சா பாவனையில் ஈடுபட்டவர்களின் எண்ணிக்கை மூன்று இலட்சத்து ஐம்பதாயிரம் எனவும், ஏறக்குறைய ஒரு இலட்சம் பேர் ஹெரோயின் பாவனைக்கு அடிமையாகியுள்ளதாக ஆபத்தான மருந்துகளுக்கான தேசிய போதைப்பொருள் சபை தெரிவித்துள்ளது.

அத்துடன் பெரும்பான்மையான பாடசாலை மாணவர்களிடையே புகையிலையை பாவிக்கும் போக்கு காணப்படுகின்ற போதிலும் பாடசாலைகளில் ஐஸ் போன்ற போதைப்பொருட்கள் தொற்று நோயாக பரவும் அபாயம் இன்னும் இல்லை எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும் மொத்த சனத்தொகையில் 15 இலட்சம் பேர் புகையற்ற புகையிலை பாவனையிலும், இருபத்தைந்தாயிரம் முதல் முப்பதாயிரம் பேர் வரை பல்வேறு போதைப்பொருள் பாவனையிலும், ஈடுபட்டுள்ளனர் என்றும் அத் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 13.04.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.




## தீவிர பயிற்சி முக்கியம்

### வேகப்புயல் பும்ரா கருத்து

மும்பை, ஏப். 13

ரி - 20 கிரிக்கெட் போட்டி பந்து வீச்சாளர்களுக்கு மிகவும் கடுமையான சோதனையைத் தரும். அதனால், அனைத்து விதமான திறனும் பந்து வீச்சாளர்களுக்கு அவசியம். அதனால்தான் நான் தீவிர பயிற்சி மேற்கொண்டு வருகிறேன் என இந்திய அணியின் வேகப்பந்து வீச்சாளர் ஜஸ்பிரித் பும்ரா தெரிவித்தார்.

மும்பை இந்தியன்ஸ் அணியுடன் நேற்று முன்தினம் நடந்த போட்டியில் றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூரு அணி படுதோல்வி அடைந்தது

இந்தப் போட்டி முடிந்ததும், “பும்ரா போன்று ஒரு பந்து வீச்சாளர் எங்கள் அணியில் இல்லை. இதுதான் இரண்டு இன்னிங்ஸ்/க்கும் இடையிலான வித்தியாசம் என ஆர்.சி.பி. அணித் தலைவர் டூப்ளசிஸ் தெரிவித்தார். இந்தப் போட்டியில் பும்ராதான் ஆட்டநாயகன் விருதை வென்றிருந்தார்.

ஆர். சி. பி. அணிக்கு எதிராக 4 ஓவர்கள் வீசி 21 ஓட்டங்கள் விட்டுக் கொடுத்து 5 விக்கெட்களை கைப்பற்றினார் பும்ரா. இதில் 13 பந்துகள் ஓட்டம் ஏதும் கொடுக்காமல் வீசியிருந்தார்.

““இந்த நாள் சிறந்த நாளாக அமைந்தது. களத்தில் நான் செய்ய நினைத்ததை செய்தேன். பந்து கிரிப் ஆவதை முதல் ஓவரில் நான் கவனித்தேன். நல்ல லெந்தில் பந்தை வீச விரும்பினேன். கடந்த 11 ஆண்டுகளாக இதை செய்து வருவதால் நான் இதற்குப் பழக்கப்பட்டவன் ஆகியுள்ளேன். நமக்கு சிறப்பாக அமையும் நாளில் அதிக கொண்டாட்டமும் கூடாது, மோசமான நாளில் மனதளவில் துவண்டு போகவும் கூடாது““ என முதல் இன்னிங்ஸ் முடிந்த பிறகு பும்ரா கருத்து வெளியிட்டார். இதேவேளை, சிறப்பாக துடுப்பெடுத்தாடிய ஆர்.சி.பி. வீரர் தினேஷ் கார்த்திக்கின் ஆட்டத்தையும் வெகுவாக பாராட்டியிருந்தார்.

இந்நிலையில், 7 விக்கெட் வித்தியாசத்தில் மும்பை அணி வெற்றி பெற்றதும் ஆட்ட நாயகனாக பும்ரா அறிவிக்கப்பட்டார். ““ ரி - 20 கிரிக்கெட் போட்டி பந்துவீச்சாளர்களுக்கு மிகவும் கடுமையான சோதனையை தரும். அதனால், அனைத்து விதமான திறனும் பந்து வீச்சாளர்களுக்கு அவசியம். அதனால்தான் நான் தீவிர பயிற்சி மேற்கொண்டு வருகிறேன். என்னைப் பொறுத்த வரையில் போட்டிக்கு தயாராவது தான் மிகவும் முக்கியம். வலைப்பயிற்சியில் நமக்கான விடை கிடைக்கும்.

பந்து வீச்சில் நமது வேகத்தைக் குறைத்தும் வீச வேண்டியிருக்கும். இங்கு ஈகோவுக்கு இடம் இல்லை. ஆடுகளம் குறைந்த வேகத்தில் வரும் பந்துகளுக்கு கைகொடுத்தால் பந்து வீச்சாளர்கள் அதைத் தான் செய்ய வேண்டும். துடுப்பாட்ட வீரர்கள் எனது பந்து வீச்சை துவம்சம் செய்தால் எங்கு தவறு செய்தோம் என்பதை ஆராய்வேன். அதிலிருந்து மீண்டு வருவது குறித்து யோசிப்பேன். மொத்தத்தில் தீவிர பயிற்சி என்பது மிகவும் அவசியம் என பும்ரா தெரிவித்தார்.(எ)

# சொதப்பியது ஆர்.சி.பி. மும்பை இலகு வெற்றி

மும்பை, ஏப். 13

நடப்பு ஐ.பி.எல். தொடரின் 25ஆவது லீக் போட்டியில் மும்பை இந்தியன்ஸ் மற்றும் றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூரு அணிகள் நேற்று முன்தினம் மோதின. இதில் 7 விக்கெட் வித்தியாசத்தில் மும்பை அணி வெற்றிபெற்றது.

மும்பை - வான்கடே கிரிக்கெட் மைதானத்தில் நடைபெற்ற இந்தப் போட்டியில் நாணயச்சுழற்சியில் வென்ற மும்பை இந்தியன்ஸ் அணி பந்து வீச்சைத் தெரிவு செய்தது. ஆர்.சி.பி. அணிக்காக விராட் கோலி மற்றும் டூப்ளசிஸ் இணைந்து இன்னிங்ஸை ஆரம்பித்தனர். கோலி 9 பந்துகளில் 3 ஓட்டங்கள் எடுத்து பும்ரா பந்து வீச்சில் விக்கெட்டை இழந்து இரசிகர்களை ஏமாற்றினார். அறிமுக வீரர் வில் ஜேக்ஸ் 8 ஓட்டங்களில் வெளியேறினார்.

3 ஆவது விக்கெட்டுக்கு ரஜத் பட்டிதார் மற்றும் டூப்ளசிஸ் இணைந்து 82 ஓட்டங்கள் சிறந்த இணைப்பாட்டம் அமைத்தனர். பட்டிதார் 26 பந்துகளில் 50 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார். 3 பௌண்ட்ரிகள் மற்றும் 4 சிக்ஸர்களை விளாசியிருந்தார். நான்கு பந்துகளை வீண் செய்த மக்ஸ்வெல் ஓட்டம் எதுவும் எடுக்காமல் ஆட்டமிழந்தார்.

இந்நிலையில், தினேஷ் கார்த்திக் - டூப்ளசிஸ் இணைந்து 45 ஓட்டங்கள் சேர்த்தனர். 40 பந்துகளில் 61 ஓட்டங்கள் எடுத்த டூப்ளசிஸ், பும்ராவிடம் 17ஆவது ஓவரில் விக்கெட்டை பறிகொடுத்தார். அடுத்த பந்தில் மஹிபால் லோம்ரோரை வெளியேற்றினார் பும்ரா.

20 ஓவர்களில் 8 விக்கெட்கள் இழப்புக்கு 196 ஓட்டங்கள் குவித்தது றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூரு அணி. இறுதி வரை ஆட்டமிழக்காமல் இருந்த கார்த்திக் 23 பந்துகளில் 53 ஓட்டங்கள் எடுத்ததார்.



197 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்குடன் களமிறங்கிய மும்பை அணியில் இஷான் கிஷன் - ரோஹித் சர்மா இருவரும் சிறப்பான ஆரம்பத்தை வழங்கினர். ரோஹித் 24 பந்துகளில் 38 ஓட்டங்கள், இஷான் 34 பந்துகளில் 69 ஓட்டங்கள் என ஆரம்பத்திலேயே அதகளப்படுத்தினர். 11ஆவது ஓவரில் ரோஹித் ஆட்டமிழந்தார். அடுத்து களமிறங்கிய அணித் தலைவர் ஹர்திக் பாண்டியா தான் எதிர்கொண்ட முதல் பந்திலேயே சிக்ஸரை பறக்க விட்டார்.

ஹர்திக் 21 ஓட்டங்கள் - சூர்யகுமார் யாதவ் 52 ஓட்டங்கள், திலக் வர்மா 16 ஓட்டங்கள் சேர்த்த நிலையில், 15.3 ஓவர்களிலேயே 197 ஓட்டங்கள் எடுத்து ஏழு விக்கெட்கள் வித்தியாசத்தில் ஆர்.சி.பியை இலகுவாக வீழ்த்தியது மும்பை இந்தியன்ஸ் அணி.

இந்தத் தோல்வி மூலம் நடப்பு ஐ.பி.எல். தொடரில் இதுவரை ஆர்.சி.பி. விளையாடிய நான்கு போட்டிகளிலும் தோல்வியைத் தழுவியுள்ளமை குறிப்பிடத்தக்கது.


## ஊக்க மருந்து விவகாரத்தில் என்னை சிக்க வைக்கச்சதி

### மல்யுத்த வீராங்கனை மன வேதனை

டில்லி, ஏப். 13

ஒலிம்பிக் போட்டிக்கான தகுதிச் சுற்றில் தான் பங்கேற்பதைத் தடுக்க மல்யுத்த கூட்டமைப்பு தலைவர் சஞ்சய் சிங் முயன்று வருவதாக இந்திய மல்யுத்த வீராங்கனை வினேஷ் போகத் குற்றம்சாட்டியுள்ளார். தன்னை ஊக்க மருந்து விவகாரத்தில் சிக்க வைப்பதற்கான சதி நடப்பதாகவும் அவர் கவலை வெளியிட்டுள்ளார்.

பொதுநலவாய உலக சம்பியன்ஷிப், ஆசிய சம்பியன்ஷிப் போட்டிகளில் இந்தியாவுக்காக பதக்கம் வென்றவர் வினேஷ் போகத். இவர் ஒலிம்பிக்கிலும் போட்டியிட்டுள்ளார். இதேவேளை, கிர்கிஸ்தான் நாட்டில் அடுத்த வாரம் நடைபெறவுள்ள ஆசிய தகுதித் தொடரின் மூலம் பாரிஸ் ஒலிம்பிக்கில் விளையாடுவதற்கான தகுதியை எதிர்நோக்கியுள்ளார். இந்தச் சூழலிலேயே மேற்கண்டவாறு குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார். (எ)






## தினேஷ் கார்த்திக்கை கலாய்த்த ரோஹித்

மும்பை, ஏப். 13

இருபது - 20 உலகக் கோப்பை தெரிவுக்காக விளையாடுகிறாயா? என தினேஷ் கார்த்திக்கை கலாய்த்துள்ளார் இந்திய அணியின் தலைவர் ரோஹித் சர்மா.

மும்பை இந்தியன்ஸ் அணிக்கு எதிராக துடுப்பெடுத்தாடிய தினேஷ் கார்த்திக் தன்னிடமுள்ள அனைத்து விசித்திரமான ஆட்டத்திறமைகளையும் வெளிப்படுத்தியிருந்தார். 23 பந்துகளில் 5 பௌண்ட்ரிகள், 4 சிக்ஸர்களுடன் 53 ஓட்டங்களை குவித்து ஆட்டமிழக்காமல் இருந்த தினேஷ் கார்த்திக் ஆர்.சி.பி. அணியின் ஓட்ட எண்ணிக்கையை 196 ஓட்டங்களுக்கு உயர்த்தினார். அப்போது களத்திலிருந்த தினேஷ் கார்த்திக்கை மும்பை இந்தியன்ஸ் முன்னாள் அணித் தலைவர் ரோஹித் சர்மா நட்பு ரீதியாக கலாய்த்தது சமூக ஊடகத்தளத்தில் வைரலாகி வருகிறது.

ரோஹித் சர்மா தலைமையில் தான் இருபது -20 உலகக் கோப்பை தொடருக்கு இந்திய அணி செல்லவுள்ள நிலையில் தினேஷ் கார்த்திக்கை உலகக் கோப்பை ரி - 20 அணித் தெரிவுக்கு விளையாடுகிறாயா? என நட்பு ரீதியாக கலாய்த்துள்ளார்.

ரோஹித் சர்மாவின் இந்த கலாய்ப்பு விக்கெட்டில் பொருத்தப்பட்டிருந்த ஒலிவாங்கியில் தெளிவாகக் கேட்கிறது. இது தொடர்பான காணொலி எக்ஸ் தளத்தில் பகிரப்பட்டு வைரலானது.

அதில், “வெல்டன் டி.கே., உலகக் கோப்பை தெரிவுக்காக தன்னை இப்படி வெளிப்படுத்திக் கொள்கிறார். தினேஷ் கார்த்திக் மனம் முழுவதும் உலகக் கோப்பை நினைப்புதான்” என்று சிரித்துக் கொண்டே ரோஹித் சர்மா, தினேஷ் கார்த்திக்கிடம் கூற, அங்கிருந்த இஷான் கிஷனும் சிரிக்கிறார்.

இவ்வாறு ரோஹித் கூறும் போது, கைகளைத் தட்டியபடியேதான் ரோஹித் சர்மா கலாய்த்தார். இதில் மோசமான நோக்கமோ - உள்நோக்கமோ இருப்பதாகத் தெரியவில்லை என்று பலரும் கருத்துகளை வெளிப்படுத்தினர். (எ)


## ஆசிய சம்பியன்ஷிப் பி. வி. சிந்து தோல்வி

நிங்போ, ஏப். 13

சீனாவின் நிங்போ நகரில் ஆசிய சம்பியன்ஷிப் பட்மிண்டன் தொடர் நடைபெற்று வருகிறது. இதில் மகளிர் ஒற்றையர் பிரிவில் கால் இறுதிக்கு முந்தைய சுற்றில் இந்தியாவின் பி.வி.சிந்து, போட்டித் தரவரிசையில் 6 ஆவது இடத்திலுள்ள சீனாவின் ஹான் யூவேயுடன் மோதினார். ஒரு மணி நேரம் 9 நிமிடங்கள் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் சிந்து 18 - 21, 21 - 13. 17 - 21 என்ற செட் கணக்கில் போராடித் தோல்வியடைந்தார்.

இதேவேளை, ஆடவர் ஒற்றையர் பிரிவில் போட்டித் தரவிசையில் 6 ஆவது இடத்திலுள்ள இந்தியாவின் எச். எஸ். பிரனாய், சீன தைபேவின் லின் சுன்யிடம் 18 - 21, 11 - 21 என்ற நேர் செட் கணக்கில் தோல்வியடைந்தார்.

இந்த ஆட்டம் 43 நிமிடங்களில் முடிவடைந்தது. மகளிர் இரட்டையர் பிரிவில் இந்தியாவின் அஸ்வினி பொன்னப்பா, தனிஷா கிரஸ்டோ ஜோடி 17 - 21, 12 - 21 என்ற நேர் செட் கணக்கில் ஜப்பானின் நமி மட்சுயாமா, சிஹாரு ஷிடா ஜோடியிடம் தோல்வியடைந்தது. (எ)



ஈழநாடு



# நம் உடலுக்கு கோப்பியின் தேவை என்ன? அது அதிகரித்தாலும் குறைந்தாலும் என்ன ஆகும்?





நியூயார்க் நகரத்தின் பரபரப்பான தெருக்கள் முதல் எத்தியோப்பியாவின் அமைதியான மலைப்பகுதிகள் வரை, மில்லியன் கணக்கான மக்களின் அன்றாட வாழ்க்கையின் அடிப்படை பானமாக கோப்பி உள்ளது. பதினைந்து நூற்றாண்டுகளுக்கும் மேலாக மனித கலாச்சாரத்தில் ஒரு குறிப்பிடத்தக்க இடத்தைப் பிடித்துள்ளது.

இந்த கோப்பி எனும் பானம் 17 மற்றும் 18ஆம் நூற்றாண்டுகளில் அறிவொளியைத் தூண்டியதாக சிலர் கூறுகின்றனர். இந்த நூற்றாண்டுகளில் தான் நவீன உலகின் பல அறிவுசார் மற்றும் கலாச்சார கருத்துக்களுக்கு அடித்தளம் அமைக்கப்பட்டது.

கோப்பியில் உள்ள முக்கிய மூலப்பொருள் காஃபின் ஆகும், இது இப்போது உலகில் மிகவும் பரவலாக நுகரப்படும் பொருளாகக் கருதப்படுகிறது. நாம் எப்படி சிந்திக்கிறோம், உணர்கிறோம் என்பதை இது பாதிக்கிறது.

### கோப்பி எங்கிருந்து வந்தது?

கோப்பி என்பது எத்தியோப்பியாவில் கண்டுபிடிக்கப்பட்ட காஃபி அராபிகா எனும் செடியின் பழத்திலிருந்து முதலில் பெறப்பட்டது.

90வீதத்துக்கும் அதிகமான கோப்பி உற்பத்தி வளரும் நாடுகளில் தான் நடைபெறுகிறது, முக்கியமாக தென் அமெரிக்கா, வியட்நாம் மற்றும் இந்தோனேசியாவில்.

புராணக்கதை என்னவென்றால், 9-ஆம் நூற்றாண்டில் கால்டி என்ற ஆடு மேய்ப்பவர், தன் ஆடுகள் கோப்பி பெர்ரிகளை உட்கொண்ட பிறகு அவற்றின் ஆற்றல் அளவு அதிகரித்ததைக் கண்டறிந்தார். இதனால் அவரும் அதை உட்கொள்ள முடிவு செய்தார்.

அப்போதிருந்து, உள்ளூர்வாசிகள் மசித்த கோப்பி பீன்ஸை பயன்படுத்தத் தொடங்கினர் அல்லது அந்த தாவரத்தின் இலைகளிலிருந்து தேநீர் தயாரிக்கத் தொடங்கினர்.

14ஆம் நூற்றாண்டில் ஏமனில் வாழ்ந்த சூஃபிகள் தான் முதன்முதலில் கோப்பி விதைகளை வறுத்து, இன்று நாம் அறிந்த பானத்தை உருவாக்கியதாக வரலாற்றுக் கணக்குகள் தெரிவிக்கின்றன.

15ஆம் நூற்றாண்டில், ஒட்டோமான் பேரரசு முழுவதும் கோப்பி ஹவுஸ்கள் தோன்றின. பின்னர் ஐரோப்பாவிற்கு இது பரவியது. அங்கு வணிகம், அரசியல் மற்றும் புதிய சிந்தனைகளின் மையமாக மாறியது கோப்பி.

20-ஆம் நூற்றாண்டின் புகழ்பெற்ற ஜெர்மன் தத்துவஞானியும் சமூகவியலாளருமான ஜூர்கன் ஹேபர்மாஸ் போன்ற சில அறிஞர்கள், கோப்பியின் தாக்கம் இல்லாமல் அறிவொளி இயக்கம் சாத்தியமாகியிருக்காது என்று கூட வாதிடுகின்றனர்.

ஹேபர்மாஸின் கூற்றுப்படி, 17 மற்றும் 18ஆம் நூற்றாண்டுகளில் கோப்பி ஹவுஸ்கள் "விமர்சன மையங்களாக" மாறியது. அங்கு பொதுக் கருத்துகள் மற்றும் சிந்தனைகள் உருவாக்கப்பட்டன.

முக்கிய அறிவொளி இயக்க பிரமுகர்களும் இந்த பானத்தின் பெரும் ரசிகர்களாக இருந்ததாக நம்பப்படுகிறது.

பிரெஞ்சு தத்துவஞானி வால்டேர், ஒரு நாளைக்கு 72 கப் கோப்பி வரை பருகினார். அதே நேரத்தில் அவரது நாட்டவரான டிடெரோட் தனது 28-தொகுதிகளைக் கொண்ட 'என்சைக்ளோபீடியாவை' தொகுக்க கோப்பியை தான் நம்பியிருந்தார்.

இவரது என்சைக்ளோபீடியா தான் அறிவொளி இயக்கத்தின் கொள்கைப் படைப்பாகக் கருதப்படுகிறது என்று அமெரிக்க எழுத்தாளர் மைக்கேல் பொல்லான் கூறுகிறார்.

அமெரிக்காவில் உள்ள வாண்டர்பில்ட் பல்கலைக்கழகத்தின் கோப்பி ஆய்வுகளுக்கான பிரிவின் தலைவர், மானுடவியல் பேராசிரியர் டெட் பிஷ்ஷர், "முதலாளித்துவத்தின் எழுச்சியில் கோப்பியும் முக்கிய பங்கு வகித்தது" என்கிறார்.

அவர் எம்மோடு பேசியபோது, "கோப்பி வரலாற்றின் போக்கை மாற்றியது. அறிவொளி மற்றும் முதலாளித்துவத்திற்கு வழிவகுத்த சிந்தனைகளின் வளர்ச்சியை ஊக்குவித்தது.

ஜனநாயகம், பகுத்தறிவு, அனுபவவாதம், அறிவியல் மற்றும் முதலாளித்துவம் பற்றிய கருத்துக்கள், கோப்பியின் நுகர்வு பிரபலமடைந்த நேரத்தில் வந்தது என்பது எனக்கு வெறும் விபத்தாகத் தெரியவில்லை. கருத்து மற்றும் செறிவை விரிவுபடுத்தும் இந்த பானம் நிச்சயமாக முதலாளித்துவத்திற்கு வழிவகுத்த சூழலின் ஒரு பகுதியாகும்" என்றார்.

"அந்த காலத்தில், கோப்பியை உற்பத்தித் திறனை அதிகரிக்கப் பயன்படுத்தலாம் என்பதை வணிகர்கள் உணர்ந்தனர். எனவே அவர்கள் தங்கள் தொழிலாளர்களுக்கு கோப்பியை வழங்கத் தொடங்கினர், இறுதியில் அவர்களுக்கு கோப்பி இடைவேளை வழங்கும் வழக்கம் தோன்றியது" என்று கூறுகிறார் பிஷ்ஷர்.

### கோப்பி உடலில் தாக்கத்தை ஏற்படுத்துவது எப்படி?

காஃபின் உட்கொண்டவுடன், செரிமான அமைப்பு வழியாகச் சென்று குடல் வழியாக இரத்த ஓட்டத்தில் அது உறிஞ்சப்படுகிறது. இருப்பினும், அதன் பாதிப்பு நரம்பு மண்டலத்தை அடைந்தவுடன் மட்டுமே தொடங்குகிறது.

உடலில் இயற்கையாக உற்பத்தி செய்யப்படும் பொருளான அடினோசினுடன் காஃபினுக்கு இருக்கும் இரசாயன ஒற்றுமை காரணமாக இது நடக்கிறது. அடினோசின் பொதுவாக தன்னியக்க நரம்பு மண்டலத்தின் இயக்கத்தை தளர்த்துகிறது, இதய துடிப்பு குறைவதற்கு வழிவகுக்கிறது. தூக்கம் மற்றும் தளர்வு உணர்வுகளை தூண்டுகிறது.

காஃபின் நரம்பு செல்களின் மேற்பரப்பில் அமைந்துள்ள அடினோசின் ஏற்பிகளுடன் பிணைப்பை ஏற்படுத்துகிறது, இது ஒரு பூட்டுக்குள் சாவியைப் பொருத்துவது போல. ஆனால் இந்த ஏற்பிகளைத் தடுப்பதன் மூலம், அது ஒரு எதிர்விளைவை உருவாக்குகிறது.

இது இரத்த அழுத்தத்தில் ஒரு மாற்றத்தை உருவாக்கலாம், மூளையின் செயல்பாட்டைத் தூண்டலாம், பசி உணர்வைக் குறைக்கலாம் மற்றும் விழிப்புணர்வை மேம்படுத்தலாம். இதன் மூலம் நீண்ட நேரத்திற்கு கவனச் சிதறல் இல்லாமல் இருக்கலாம்.

மனநிலை மேம்பாடு, சோர்வு குறைப்பு மற்றும் மேம்பட்ட உடல் செயல்திறன் ஆகியவற்றிலும் காஃபினுக்கு முக்கிய பங்கு உள்ளது. சில நேரங்களில் விளையாட்டு வீரர்கள் இதை ஒரு ஊட்டச்சத்துக் குறைநிரப்பியாக பயன்படுத்துகின்றனர்.

காஃபினின் பாதிப்புகள் 15 நிமிடங்கள் முதல் இரண்டு மணி நேரம் வரை நீடிக்கும். உட்கொண்ட ஐந்து முதல் 10 மணி நேரத்திற்குப் பிறகு உடல் காஃபினை வெளியேற்றிவிடும், ஆனால் அதன் பக்க விளைவுகள் நீண்ட காலத்திற்கு இருக்கும்.

உடலில் காஃபின் நன்மைகளை அதிகரிக்க, அதை மிதமாக உட்கொள்ள நிபுணர்கள் அறிவுறுத்துகிறார்கள். மேலும், காலை முதல் கப் கோப்பியை பருகும் போது உண்டாகும் காஃபின் தாக்கத்தைப் பாதுகாக்க, மதியம் கோப்பி சாப்பிடுவதைத் தவிர்க்க வேண்டும் எனவும் கூறுகிறார்கள்.

ஆரோக்கியமான பெரியவர்களுக்கு தினசரி காஃபின் வரம்பு 400 மில்லிகிராம் என வழிகாட்டுதல்கள் பரிந்துரைக்கின்றன, இது நான்கு அல்லது ஐந்து கப் கோப்பிக்கு சமம்.

இந்த வரம்பை மீறுவது தூக்கமின்மை, பதட்டம், இதயத் துடிப்பு மிகைப்பு, வயிற்று அசௌகரியம், குமட்டல் மற்றும் தலைவலி போன்ற பக்க விளைவுகளுக்கு வழிவகுக்கும்.

1,200 மில்லிகிராம் காஃபின் - சுமார் 12 கப் கோப்பியை விரைவாக உட்கொள்வதன் மூலம் வலிப்புத்தாக்கங்கள் போன்ற மோசமான விளைவுகள் ஏற்படலாம் என்று அமெரிக்காவின் உணவு மற்றும் மருந்து நிர்வாகத்தின் நிபுணர்கள் எச்சரிக்கின்றனர்.

இருப்பினும் மிதமான அளவில் குடிப்பதால், கோப்பி சாத்தியமான ஆரோக்கிய நலன்களை வழங்குவதாகக் கருதப்படுகிறது. மரணம் மற்றும் பல நோய்களின் அபாயத்தைக் குறைப்பதிலும் காஃபினுக்கு பங்குள்ளது என்று ஹார்வர்ட் டி.எச். சான் ஸ்கூல் ஆஃப் பப்ளிக் ஹெல்த்தின் மருத்துவர் மேட்டியாஸ் ஹென் கூறுகிறார்.

"ஒரு நாளைக்கு இரண்டு முதல் ஐந்து கப் கோப்பி வரை குடிப்பது இறப்பு அபாயத்தைக் குறைக்கும். அதேபோல நீரிழிவு, இருதய நோய்கள் மற்றும் சில வகையான புற்றுநோய்களின் அபாயத்தைக் குறைப்பதிலும் அதற்கு பங்குண்டு" என்கிறார் மருத்துவர் மேட்டியாஸ் ஹென்.

எனவே அடுத்த முறை ஒரு கப் கோப்பியை பருகும்போது, அதற்கு பின்னால் இருக்கும் வரலாற்றையும் நாம் நினைத்து பார்க்க வேண்டும். ●

# இந்தியா-சீனா எல்லை பிரச்னையை தீர்ப்பது குறித்து மோடி கூறியது என்ன?



இந்தியா-சீனா இடையே நிலவிவரும் எல்லைப் பிரச்னை குறித்துப் பிரதமர் நரேந்திர மோடி பேசியுள்ளார். சமீபத்தில் அமெரிக்க பத்திரிகையான “நியூஸ் வீக்”கிற்கு அளித்த பேட்டியில் பிரதமர் மோடி, எல்லைப் பிரச்னையை சீனாவுடன் பேசி உடனடியாக தீர்க்க வேண்டும் என தெரிவித்தார்.

“தங்கள் விநியோகச் சங்கிலியை விரிவுபடுத்த விரும்பும் நாடுகளுக்கு இந்தியா இயற்கையான தேர்வாகும்,” என, சீனாவுடனான உறவுகள் குறித்து பிரதமர் மோடி கூறினார்.

இதுதவிர, ஜம்மு காஷ்மீர், பெண்கள், தேர்தல் மற்றும் பொருளாதார வளர்ச்சி போன்ற பிரச்னைகள் குறித்தும் பேட்டியில் மோடி பேசினார்.

பாஜக தொடர்ந்து மூன்றாவது முறையாக மீண்டும் ஆட்சியை பிடிக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது, முன்பைவிட பெரிய இலக்கை நிர்ணயித்துள்ளது. பாஜக தலைவர்கள் மேற்கு வங்கம் உள்ளிட்ட மாநிலங்களிலும் தென் மாநிலங்களிலும் பரவலாக பிரசாரம் செய்து வருகின்றனர்.

2014-இல் மத்தியில் ஆட்சிக்கு வருவதற்கு முன், நரேந்திர மோடி ஊடகங்களுக்குப் பேட்டி அளிக்கவில்லை என விமர்சிக்கப்பட்டது.

கடந்த காலங்களில் அவர் பத்திரிகையாளர் சந்திப்புகளை நடத்தவில்லை என்றும் விமர்சிக்கப்படுகிறது. பிரதமர் மோடி பிரதமரான பிறகு கடந்த 10 ஆண்டுகளில் ஒருமுறை கூட செய்தியாளர் சந்திப்பு நடத்தவில்லை.


கடந்த காலங்களில், தமிழகத்தில் தந்தி டிவி மற்றும் வடகிழக்கின் தி அஸ் ஸாம் ட்ரிப்யூன் உள்ளிட்ட ஊடக நிறுவனங்களுக்கு மோடி பேட்டி அளித்துள்ளார்.

### இந்தியா-சீனா எல்லை பிரச்னை

“நியூஸ் வீக்” கிற்கு அளித்தப் பேட்டியில், பிரதமர் மோடி, சீனாவும் இந்தியாவும் உண்மையான கட்டுப்பாட்டுக் கோடு பிரச்னையை விரைவில் தீர்க்க வேண்டும் என்று கூறினார்.

சீனாவுடனான உறவுகள் இந்தியாவுக்கு முக்கியம் என்றும், இந்த நீண்டகாலச் சூழலை இரு நாடுகளும் விரைவில் தீர்க்க வேண்டும் என்றும் பிரதமர் மோடி கூறினார்.

“இருநாடுகளுக்கு இடையேயான இருதரப்புப் பேச்சுவார்த்தையில் உள்ள கடினமான சூழ்நிலையை தவிர்க்க எல்லையில் நீண்டகாலமாக நிலவும் சூழ்நிலையை உடனடியாக தீர்க்க வேண்டும் என்று நான் நம்புகிறேன்” என அவர் தெரிவித்தார்.



ராஜதந்திர வழிகள் மற்றும் ராணுவ மட்டங்களில் நடைபெறும் பேச்சுவார்த்தைகளை அவர் குறிப்பிட்டுள்ளார்.

“இரு நாடுகளுக்கும் இடையே நீடித்த மற்றும் அமைதியான உறவுகள் இரு நாடுகளுக்கும் மட்டுமின்றி, முழு பிராந்தியத்துக்கும் முக்கியம். நேர்மறையான இருதரப்பு பேச்சுவார்த்தை மூலம், எல்லையில் அமைதியை மீட்டெடுக்க முடியும் என்று நம்புகிறேன்” என பிரதமர் மோடி கூறினார்.

இந்திய நிலத்தை சீன ராணுவம் ஆக்கிரமிப்பதாக எதிர்க்கட்சிகள் பலமுறை குற்றம்சாட்டி வருகின்றன.

2020-இல் கால்வன் பள்ளத்தாக்கில் இந்திய மற்றும் சீன ராணுவத்தினருக்கு இடையே கடும் மோதல் ஏற்பட்டது. இந்த மோதலில் இந்திய ராணுவத்தினர் 20 பேர் உயிரிழந்தனர்.

அப்போது, “எங்கள் பகுதிக்குள் யாரும் நுழையவும் இல்லை, அப்பகுதியை கைப்பற்றவும் இல்லை,” என பிரதமர் மோடி தெரிவித்திருந்தார்.

### இந்தியா-சீனா உறவுகள் குறித்து மோடி கூறியது என்ன?

உலகப் பொருளாதார வளர்ச்சியில் ஜனநாயக அரசியல் மற்றும் விநியோகச் சங்கிலிகளில் பன்முகத்தன்மையைக் காண விரும்புவோருக்கு இந்தியா இயற்கையான தேர்வாகும் என்று பிரதமர் மோடி கூறினார்.




பொருளாதாரம் தொடர்பான தனது அரசின் முடிவுகள், மாற்றத்தைக் கொண்டுவரும் சீர்திருத்தங்கள் என்று மோடி கூறினார்.

ஜி.எஸ்.டி (சரக்கு மற்றும் சேவை வரி), பெரு நிறுவனங்களுக்கான வரி குறைப்பு, அந்நிய நேரடி முதலீட்டு விதிகளில் தளர்வு மற்றும் தொழிலாளர் சட்டங்களில் சீர்திருத்தங்கள் ஆகியவற்றை அரசாங்கம் கொண்டு வந்துள்ளது என்று அவர் கூறினார்.

“உலக மக்கள்தொகையில் ஆறில் ஒரு பங்கைக் கொண்ட ஒரு நாடு இந்தப் பகுதிகளில் உலகளாவிய நெறிமுறைகளைக் கடைப்பிடிக்கும்போது, அது முழு உலகிலும் சாதகமான தாக்கத்தை ஏற்படுத்தும் என்று நான் நம்புகிறேன்,” என்றார்.

மேலும், “எங்கள் வலிமையைக் கருத்தில் கொண்டு, குறைந்த விலையில் உலகத்தரம் வாய்ந்த பொருட்களை இந்தியா தயாரிக்க முடியும் என்று இப்போது உலகளவில் நம்பப்படுகிறது. நாங்கள் உலகத்திற்காக உற்பத்தி செய்வது மட்டுமல்லாமல், எங்களுடைய சொந்த பெரிய மற்றும் கவர்ச்சிகரமான உள்நாட்டு சந்தையையும் கொண்டுள்ளோம். நம்பகமான மற்றும் நெகிழ்வான விநியோகச் சங்கிலிகளை உருவாக்க விரும்புவோருக்கு இந்தியா ஏற்ற இடம்,” என அவர் தெரிவித்தார்.

பாகிஸ்தான் தொடர்பான கேள்விக்கு, “பாகிஸ்தானின் உள் விவகாரங்கள் குறித்து நான் கருத்து தெரிவிக்க மாட்டேன்,” என்று பிரதமர் மோடி கூறினார்.

### சீனா மற்றும் குவாட் கூட்டமைப்பு குறித்து மோடி கூறியது என்ன?

இந்தியா, அமெரிக்கா, ஆஸ்திரேலியா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகள் அடங்கிய குவாட் கூட்டமைப்பு குறித்தும் மோடியயிடம் இந்த நேர்காணலில் கேட்கப்பட்டது.

இந்தியப் பெருங்கடலில் அதிகரித்து வரும் சீனாவின் செல்வாக்கைத் தடுக்கும் நோக்கில் இந்தக் குழு அமைக்கப்பட்டுள்ளதாக நம்பப்படுகிறது.

குவாட் தொடர்பான கேள்விக்கு பதிலளித்த மோடி, அதன் நோக்கம் எந்த நாட்டிற்கும் எதிரானது அல்ல என்றும், எஸ்சிஓ மற்றும் பிரிக்ஸ் போன்ற பிற குழுக்களைப் போலவே, இது ஒரு பொதுவான நேர்மறையான, ஒத்த எண்ணம் கொண்ட நாடுகளின் குழு என்றும் கூறினார்.

இந்தப் பிராந்தியத்தின் பாதுகாப்பு, பிராந்தியத்திற்கு மட்டுமல்ல, உலகத்திற்கே முக்கியமானது என்றும் அவர் கூறினார்.

குவாட் சுதந்திரமான மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய இந்தோ-பசிபிக் பகுதியை ஆதரிக்கிறது என்பதை அவர் தெளிவுபடுத்தினார்.

மேலும் வரவிருக்கும் தேர்தல்கள் குறித்து பேசிய மோடி, மூன்றாவது முறையாக ஆட்சியை பிடிக்க தனது கட்சி போட்டியிடுகிறது என்றும் கூறினார். இருப்பினும், “இரண்டாம் ஆட்சியின் முடிவில் மிகவும் பிரபலமான அரசாங்கங்கள் கூட ஆதரவை இழக்கத் தொடங்குகின்றன,” என்று அவர் கூறினார்.

கடந்த சில ஆண்டுகளில் உலக அளவில் அரசாங்கங்கள் மீதான மக்களின் அதிருப்தியும் அதிகரித்துள்ளதாக கூறிய அவர், ஆனால் “இந்தியா விதிவிலக்காக உள்ளது. இந்தியாவில் பாஜக அரசுக்கு ஆதரவு அதிகரித்து வருகிறது,” என்றும் கூறினார்.

(16ம் பக்கம் பார்க்க)

# இந்தியா-சீனா எல்லை பிரச்னையை...



(15ம் பக்கத் தொடர்ச்சி)

**ஊடக சுதந்திரம் பற்றி மோடி சொன்னது என்ன?**

ஜனநாயகம் மற்றும் ஊடக சுதந்திரம் குறித்து, பிரதமர் மோடி, "இந்தியா ஜன நாயக நாடு என்பது அரசியலமைப்பில் மட்டும் அல்ல, அதன் மரபணுக்களில் உள்ளது," என்றார்.

தொடர்ந்து அதிகரித்து வரும் வாக் காளர் பங்கேற்பே இந்திய ஜனநாயகத் தின் மீது மக்களுக்கு நம்பிக்கை உள்ளது என்பதற்கு சான்றாகும் என்றார்.

"இந்த விஷயத்தில் நமது ஊடகங்கள் முக்கியப் பங்காற்றுகின்றன. இந்தியா வில் சுமார் 1.5 லட்சம் ஊடக வெளியீடு களும், நூறு செய்தி சேனல்களும் உள்ளன," என்றார்.

**ஜம்மு காஷ்மீர் விவகாரம்**

ஆகஸ்ட் 5, 2019 அன்று, ஜம்மு காஷ் மீருக்கு சிறப்பு அந்தஸ்து வழங்கும் அரசி யலமைப்பின் 370-வது பிரிவை மத்திய அரசு நீக்கியது. மேலும், ஜம்மு-காஷ்மீர் மற்றும் லடாக் இரண்டு தனி யூனியன் பிரதேசங்களாக மாற்றப்பட்டன. சட் டப்பிரிவு 370 நீக்கப்பட்ட பிறகு, பிரத மர் மோடி சமீபத்தில் முதல் முறையாக காஷ்மீர் சென்றார்.

அந்த பேட்டியில் மோடி கூறுகை யில், "ஜம்மு காஷ்மீர் மாநிலத்தில் ஏற்பட் டுள்ள மாற்றங்களை நேரடியாக பார்க்க அனைவரும் அங்கு வருமாறு கேட்டுக் கொள்கிறேன்," என்றார்.

"மற்றவர்கள் சொல்வதை நம்பாதீர் கள். கடந்த மாதம் ஜம்மு காஷ்மீர் சென் றேன். எனது வாழ்க்கையில் முதல்முறை யாக மக்கள் புதிய நம்பிக்கையை கண் டுள்ளனர். வளர்ச்சி, சிறந்த நிர்வாகத்தை உங்கள் கண்களால் பார்க்கவும்," என்றார்.

தீவிரவாத சம்பவங்கள் குறைவது குறித்தும் மோடி பேசினார்.

மக்கள் வாழ்க்கையை சீர்குலைத்த வேலைநிறுத்தம், கல் வீச்சு போன்ற சம்பவங்கள் இப்போது கடந்த காலமா கிவிட்டன என்று பிரதமர் மோடி கூறினார்.

நாட்டின் வளர்ச்சியில் பெண்கள் முன் னணியில் இருப்பதாக மோடி கூறினார்.

"பெண்கள் மேம்பாடு என்ற சொல்லை பெண்கள் தலைமையிலான வளர்ச்சி என்று மாற்றியுள்ளோம்," என்று அவர் கூறினார்.

நாடாளுமன்றம் மற்றும் சட்டமன் றங்களில் பெண்களுக்கு 33 வீத இட ஒதுக்கீடு வழங்கும் சட்டம் இயற்றுவது குறித்துப் பேசினார். மேலும், எதிர்வரும் பொதுத் தேர்தலில் 15 வீத பெண்கள் புதிய வாக்காளர்களாகப் பதிவு செய்துள் ளனர் என்றார்.

தனது ஆட்சிக் காலத்தில், பெண்க ளின் ஆரோக்கியத்தில் சாதகமான பணி கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மோடி தெரிவித்தார்.

2014-இல் 130 ஆக இருந்த தாய்மார் களின் இறப்பு விகிதம் ஒரு லட்சம் பிறப் புகளில் 2020-இல் 97 ஆகக் குறைந்துள் ளது. இது தவிர, மகப்பேறு சலுகையில் 26 வார ஊதியத்துடன் கூடிய விடுப்பு வழங்க அரசு ஏற்பாடு செய்துள்ளது.

ராணுவம் மட்டுமின்றி மற்ற துறைக ளிலும் பெண்களின் பங்களிப்பு அதிக ரித்து வருகிறது என்றார். இதுகுறித்து அவர் கூறுகையில், "இந்தியாவில் உள்ள விமானிகளில் 15வீதம் பேர் பெண்கள், இதுவே உலகிலேயே அதிகம்," என்றார்.

மேலும், "கழிப்பறைகள், சானிட்டரி நாப்கின்கள் போன்ற பிரச்னைகள் குறித் துப் பேசிய முதல் பிரதமர் நான்தான்," என அவர் கூறினார். ●

